பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 6.00

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2034 | மார்கழி 06 | ஞாயிற்றுக்கிழமை | (21.12.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 02

## ஜனாதிபதி அமைச்சுக்களைப் பறித்ததால்

# புலிகளின் திட்ட வரைபு ஓரங்கட்டப்பட்டு விட்டது!

## முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன தெரிவிப்பு

(நமது நிருபர்)

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் மூன்று அமைச்சுக்கள் பொறுப்பேற்கப்பட்டதை அடுத்து சமாதான நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ள நிலையில் நாட்டின் பொருளாதார நிலைமைகளில் பாதகமான விளைவுகள் ஏற்படுமெனவும் சர்வதேச நிதி உதவிகளும் கிடைக்காது போய்விடுமெனவும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

ஜப்பான் நாட்டின் நிதி உதவியுடன் கம்பளையில் அமைக்கப்பட்டுள்ள பாலம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கம்பளையிலிருந்து நுவரெலியா செல்லும் வீதியில் மகாவலி கங்கைக்குக் குறுக்கே கம்பளை நகரில் புதிதாக அமைக்கப்பட்ட இப் பாலத்தைத் திறந்து வைத்தார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அங்கு மேலும் பேசுகையில், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற அரசியல் நிலை சர்வதே நாடுகளிடம் இருந்து பெறக்கூடிய நிதி உதவிகளை பெறுவதில் சிக்கல்களையும் தடைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் ஏற்பட்டுள்ள துரதிஷ்டவசமான சம்பவங்களினால் சர்வதேச சமூகம் எம்மீது சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறது. சமாதான நடவடிக்கைகள் பெரும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்ட வரைபு கவனிப்பாரற்று ஓரங்கட்டப்பட்டு விட்டது.

சமாதான முயற்சிகளுக்கு மத்தியஸ்தம் வகித்த நோர்வே அரசும் அதனைக் கைவிட்டு நாடு திரும்பியுள்ளது. இந் நிலையில் சர்வதேச சமூகம் எமக்குச் செய்ய இருந்த உதவிகள் எதனையும் செய்வதற்கு தயாராக இல்லை என்றும் அமைச்சர் மாரப்பன தெரிவித்துள்ளார்.

இவ் வைபவத்தில் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவரும் கலந்து கொண்டார்.(ம)

## அடுத்துவரும் சில மாதங்களில் அரசியலில் பெரும் மாற்றம்!

## அமைச்சர் ஹக்கீம் ஆரூடம்



(அம்பாறை)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைகாரணமாக அடுத்து வரும் மாதங்களில் பாரிய மாற்றங்கள் ஏற்படலாம் என்ற

...தானத்தை விரும்புகின்ற சர்வதே நாடுகளிலும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இருந்து போட்டியிடும் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அமைச்சர் ரவூப்ஹக்கீம் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

## தென்பகுதிக்கு நெல் எடுத்துச் செல்லத் தடை

### தமிழீழ வருவாய்த் துறை அறிவிப்பு

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணம், வன்னிப்பிரதேசங்களில் இருந்து தென்பகுதிக்கு நெல் ஏற்றுமதி செய்வது தற்காலிகமாக இன்று முதல் நிறுத்தப்பட்டுள்ளதாக தமிழீழத் நிதித்துறையின் வருவாய்ப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், வன்னி, ஆகிய மாவட்டங்களின் நெற்தேவையைக் கருத்தில் கொண்டே தென்பகுதிக்கான நெல் ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக வருவாய்ப்பகுதியினர் தெரிவித்துள்ளனர். (ம)

## ஆலயங்களில் களவாடப்பட்ட

கம்பளை நகரில் புதிதாக அமைக்கப்பட்ட இப் பாலத்தைத் திறந்து வைத்தார்.


முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக்

எம்மீது சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறது. சமாதான நடவடிக்கைகள் பெரும் இக்கட்

சமூகம் எமக்குச் செய்ய இருந்த உதவிகள் எதனையும் செய்வதற்கு தயாராக இல்லை

# அடுத்துவரும் சில மாதங்களில் அரசியலில் பெரும் மாற்றம்!

## அமைச்சர் ஹக்கீம் ஆரூடம்



(அம்பாறை)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைகாரணமாக அடுத்து வரும் மாதங்களில் பாரிய மாற்றங்கள் ஏற்படலாம் என்ற பீதியும் கவலையும் எல்லோர் மத்தியுலும் உருவாகியுள்ளது.இத்தகைய பீதி இலங்கையில் மட்டுமன்றி சமாதானத்தை விரும்புகின்ற சர்வதே நாடுகளிலும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஒத்திவைக்கப்பட்டுள்ள வடக்குக் கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் இருந்து போட்டியிடும் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அமைச்சர் ரவூப்ஹக்கீம் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அம்பாறையில் உள்ள அமைச்சரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில்,

ஜனாதிபதிக்கும் பிரமருக்குமிடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் காரணமாக தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள தொய்வு நிலையையும், தேக்க நிலையையும் தொடர்ந்து நீடிக்க விடாது ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் உரிய முறையில் அழுத்தங்களைக் கொடுத்து பிரயோசனமான அணுகுமுறைகளைப் பிரயோகித்து வந்தால் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் இனப்பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டுவிடும்.

முஸ்லிம் மக்களின் எதிர் கால வாழ்வுக்கு எமது பதவிகள் தடையாக இருக்குமானால் அப் பதவிகளைத் தூக்கி எறிய ஒரு போதும் நாம் தயங்க மாட்டோம் என்றும் இக்கூட்டத்தில் அமைச்சர் சூழுரைத்துள்ளார். (ம)

# 6 இந்திய மீனவர்கள் கைது

## 35 மீனவர்கள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடலில் அத்துமீறிக் கடற்தொழிலில் ஈடுபட்ட 6 இந்திய மீனவர்கள் காரைநகர் கடற்படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 6 இந்திய மீனவர்களும் நேற்று முன்தினம் ஊர்காவற்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்கள் அனைவரையும் எதிர் வரும் 2ந் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை நெடுந்தீவு, காங்கேசன்துறைக் கடற்பரப்பில் வைத்து ஏற்கனவே கைது செய்யப்பட்ட 32 மீனவர்கள் நேற்று முன்தினம் ஊர்காவற்துறை நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டதுடன், மேலும் 3 மீனவர்கள் சட்டமாஅதிபரின் உத்தரவுக்கிணங்க நேற்று விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட மீனவர்கள் அனைவரையும் இந்தியக் கடற்படை அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. (த)

# தமிழீழ வருவாய்த் துறை அறிவிப்பு

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணம், வன்னிப்பிரதேசங்களில் இருந்து தென்பகுதிக்கு நெல் ஏற்றுமதி செய்வது தற்காலிகமாக இன்று முதல் நிறுத்தப்பட்டுள்ளதாக தமிழீழத் நிதித்துறையின் வருவாய்ப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், வன்னி, ஆகிய மாவட்டங்களின் நெற்தேவையைக் கருத்தில் கொண்டே தென்பகுதிக்கான நெல் ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக வருவாய்ப்பகுதியினர் தெரிவித்துள்ளனர். (ம)

# ஆலயங்களில் களவாடப்பட்ட சிலைகள் றாகமவில் சிக்கின

## சந்தேகத்தின் பேரில் மூவர் கைது

(வட்டுக்கோட்டை)

றாகம பொலிஸாரினால் ஐம்பொன் சிலைகள், கருங்கற் சிலைகள் உட்பட பெருமளவான சிலைகள் மீட்கப்பட்டுள்ளன. குடாநாட்டில் உள்ள பல்வேறு ஆலயங்களில் இருந்து திருடப்பட்ட மேற்படி தெய்வ விக்கிரகங்கள் கப்பல் மூலம் கொண்டு செல்லப்பட்டு தென்பகுதிக்குக் கடத்தப்படவிருந்த சமயம் றாகமப் பொலிஸாரின் சோதனை நடவடிக்கையில் சிக்கியுள்ளன.

சிலைகள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை கந்தானை மற்றும் பன்னலைப் பொலிஸாரும் சைவ ஆலயங்களில் இருந்து திருடப்பட்ட பல விக்கிரகளை மீட்டுள்ளனர்.


கந்தானை, பன்னலைப் பொலிஸாரால் மீட்கப்பட்ட சிலைகள் அனைத்தும் அடையாளம் காண்பதற்கு இலகுவாக றாகமப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன ஆலய உரிமையாளர்கள் காணமற் போன சிலைகளை அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆலயத்தில் இருந்து சிலைகள் களவாடப்பட்டமை தொடர்பாகச் செய்யப்பட்ட பொலிஸ் முறைப்பாட்டுப் பிரதியுடன் சம்பந்தப்பட்டவர்களை வருகைதருமாறு றாகமப் பொலிஸ்நிலைய அதிகாரி கேட்டுள்ளார். (க-89)

# வாஜ்பாயின் அரசில் இருந்து தி.மு.க விலகிக் கொண்டது



## கலைஞர் கருணாநிதி அறிவிப்பு



(சென்னை)

பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சியின் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து திராவிட முன்னேற்றக்கழகம் விலகுவதாக கட்சியின் தலைவர் கலைஞர் மு.கருணாநிதி நேற்று அறிவித்துள்ளார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து திராவிட முன்னேற்றக் கழகம் விலகுவதாக அறிவித்த கட்சியின் தலைவர் கலைஞர் கருணாநிதி தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அமைச்சரவையில் இருந்து தி.மு.காவின் அமைச்சர்களான டீ.ஆர்.பாலு,ஏ.இராஜா ஆகிய இருவரும் மத்திய அமைச்சரவையில் இருந்து விலகிக் கொள்வார்கள்.

அதேவேளை, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நாடாறுமன்றத்தில் பிரச்சினைகளின் அடிப்படையில் வெளியில் இருந்து செயற்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

இது இவ்வாறு இருக்க, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதியின் இந்த அறிவிப்பு தொடர்பாக பாரதிய ஜனதாக் கட்சியின் தேசிய (10ம் பக்கம் பார்க்க)





வலம்புரியின் நான்காவது ஆண்டு நிறைவு விழா நேற்று வலம்புரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது வலம்புரிக் குடும்ப அங்கத்தவர்கள் கலந்து கொண்ட நிகழ்வின் சில காட்சிகள்...



## சிறுவிளம்பரம்


### பிரத்தியேக வகுப்பு

யாழ். நகரில் கணிதம் O/L பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற கற்பிக்கப்படும். அடிப்படை அறிவில லாத மாணவர்களுக்கு தரம் 9-O/L வரை 'அடிப்படையில் இருந்து கற்பக்கப்படும். தொடர்பு:- S. குமணன் T.P. 077 6176482.

(8047)


### சுருக்கெழுத்தாளர் ஆட்சேர்ப்பு

(கொழும்பு)

390க்கும் மேற்பட்ட சுருக்கெழுத் தாளர்கள் அடுத்த மாதம் முதல் அரசாங்க சேவையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

1999ஆம் ஆண்டு நடந்த போட் டிப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப் படையில் இவர்கள் அனைவரும் நியமிக்கப்படவுள்ளதாக பொதுநிர் வாக அமைச்சு அறிவித்துள்ளது.

அதேசமயம், கடந்த 2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற சுருக்கெழுத்தாளர் போட்டிப்பரீட்சை க்குத் தோற்றியவர்களுக்கான நேர் முகப்பரீட்சை இன்றும் நாளையும் பொதுநிர்வாக அமைச்சின் கொழும்பு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (தி61)

### செயலமர்வு பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விசேட கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது.

இச்செயலமர்வு நேற்றையதினம் முதல் கோப்பாய் ஆசிரியர் பயிற் சிக் கலாசாலையில் நடைபெற விருந்தது.

தவிர்க்க முடியாத காரணத் தினால் செயலமர்வு பிற்போடப்பட் டுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறி வித்துள்ளார். (ந-5)

### வத்தளையில் கைக்குண்டுவீச்சு

(கொழும்பு)

வத்தளை கொலுப்பிட்டி திக் பிட்டிய பகுதியில் கடந்த வியாழக் கிழமை இரவு இடம்பெற்ற கைக் குண்டுத் தாக்குதலில் ஒருவர் உயி ரிழந்துள்ளதுடன், 5 பேர் காயமடைந் துள்ளனர்.

இரண்டு ஓட்டோக்களில் வந்தவர் களே இக் கைக்குண்டுத்தாக்கு தலை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.


இக் கைக்குண்டு வீச்சுத் தொடர்பாக வத்தளைப் பொலிஸார் 11 பேரை கைது செய்துள்ளதுடன், மேலும் விசாரணைகளை நடத்திவரு கின்றனர். (தி-61)

# மனித உறவுகள் வளர்வதற்கு அடிப்படைத் தேவை அன்புள்ளமே!

"உன்மீது நீ அன்பு கூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக"

(மத் 22: 39)

மகிழ்ச்சியான வாழ்வை அனுப விக்க வேண்டும் என்றால் எமக்குள்



அன்புள்ளம் வளர வேண்டும். மகிழ்ச் சியை இழந்த மனிதன் அன்பில் லாத மனிதன். அவன் தன்னை நேசிக்கத் தெரியாதவன், அதனால் பிறரையும் நேசிக்க தயங்குகின் றான்.

எம்மை நாம் நேசிக்க கற்றுக் கொள்வோம் ஆயின் எமக்கு எதி ராக வருகின்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வாழ முடியும். அந்த சவால்களில் இருந்து படிப்பினை களை பெறவும், அதைக் குறித்து சோர்ந்து போகா வண்ணம் வாழ்வை முன்னெடுத்துச் செல்ல உதவியளிக் கும்.

இன்று சமூகத்தில் உள்ள பெரிய பிரசசினை தம்மைத் தாமே அன்பு செய்யாததினால் தம்மையும்-பிறரை யும் பழிவாங்கும உணர்வை வளர்த்

## பரமபிதா காட்டிய பாதை

துக் கொள்ளுகினறார்கள். இந்தப் பழிவாங்கும் உணர்வுதான் சமூக விரோதச் செயல்களையும்-சின்னத் தனங்களையும் நடத்தைக் கோலங் களாக வெளிப்படுத்துகின்றார்கள்.

மற்றும் சிறுபிரச்சினை வந்த போதலும், அதனை எதிர்கொண்டு வாழத் தற்துணிவு அற்று, தற் கொலை செய்து கொள்வதும் தமமைத் தாமே பழிவாங்கும் உணர் வினாலேயே ஆகும்.

இந்தத் தற்கொலை பழிவாங் கலினால், தற்கொலை செய்பவர் மட்டும் பாதிக்கப்படவில்லை. மாறாக அவரது குடும்பம்-உறவுகள்-நண்பர் கள்-சுற்றத்தினர் என்று பட்டியல் நீளும். இன்று அநேகர் நினைப்பது தற்கொலை செய்து கொண்டால் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்து விடும் என்று. இது தவறான சிந்தனை, இத்தகைய எண்ணம் ஒருவருக்கு உருவாகும் என்றால் அதற்குக் காரணம் தமமைத் தாமே அன்பு செய்யாமையே ஆகும்

எந்தவொரு செயலுக்கும் காரண காரிய தொடர்பு இருக்கவே செய்கின்றது. இதைப் போலத்தான் ஒருவருக்கு தற்கொலை எண்ணம் தோன்றும் என்றால் அதற்குக் கார ணம் அந்த சமூகமே. இது இவ்வாறு இருககும் போது அவரைப் பார்த்து 'உன்னைப் போல உன் அயலானை நேசி" என்று சொல்வது பொருத்தப் பாடு உடையது அல்ல. மாறாக அவ ருக்கு தன்னம்பிக்கை ஊட்டி, தம் மைத் தாமே அனபு செய்ய நேசிக்க நாம் அவர்களுடன் ஆரோக்கிய மான உறவை வளர்க்க வேண்டும். இதன் மூலம் அவரது பிரச்சினை குறை யும். தற்கொலை எண்ணம் ஏறபடாது. மாறாக என்னை நேசிக்க மற்றவர் கள இருக்கின்றார்கள். ஆகவே நானும் அவர்களை நேசிக்க வேண்டும் என்று தம்மைத் தாமே மீட்டு தற்துணி வோடு அன்பு செய்ய முன்வருவார்.

எம்மிடம் அன்பில்லாவிட்டால் மறற வரை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள, அவ ரின் வளர்ச்சியில் பங்கெடுக்க எமது உள்ளம் தடையாக அமைகின்றது. மற் றும் நாம் எது செய்தாலும் அதிலும் திருப்தி காணாது எம்மீதே எமக்கு சந்தேகம் ஏற்படும். இத்தகைய சந்தே

**யாழ். ராதவல்லி**

கப் போக்குத்தான் மற்றவரையும் சந்தேகத்துடன் பார்க்க வைக்கினறது. இதனால் பிரச்சினைகள், முரண்பாடு கள அதிகரிக்கின்றதே தவிர முழுமை யான வளர்ச்சிப் போக்கினைக் காண முடியாது.

ஆகவே உறவுகள் வளர நல்ல அன்புள்ளம் வேண்டும். அதனை வளர் க்க நாம் முயல்வோம் இதன் மூலம் சமய-சமூக-குடும்ப-வாழ்வில் ஆரோக் கியமான சூழல் தோன்றும்.

# தலைவர் பிரபாவின் சமாதான ஆர்வ வெளிப்பாடே தேசிய எழுச்சிப் பேரவை

## அரசறிவியல் கல்லூரி விரிவுரையாளர் அரசண்ணா

(யாழ்ப்பாணம்)

சமாதானத்தினைப் பெறுவதற்கு அல்லது வளர்த்துச் செல்வதற்கு நாங்கள் இன்று விலைகொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கான தரி சனங்களையும் முகங்களையும் காட் டிக்கொண்டிருக்கின்றோம். சமாதானத திற்கு இலங்கை அரசாங்கம் என்ன விலையைக் கொடுக்கின்றதோ அதே விலையையும் நாங்க்ள் கொடுக் கத் தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசறிவியல் கல்லூரி யின விரிவுரையாளரான அரசண்ணா நேற்று முன்தினம் கோண்டாவில் இருபாலை வீதியில் திறந்து வைக் கப்பட்ட தேசிய எழுச்சிப் பேரவை யின் யாழ். மாவட்டச் செயலகத் திறப்பு விழாவில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் சொலமன் சூ.சிறில் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அர சண்ணா தொடர்ந்தும் உரையாற் றும் போது,

நாங்கள் பொறுமை காத்துக் கொண்டிருக்கிறோம் எனச் சிலர் சொல்கிறார்கள். அந்தப் பொறுமை யைக் காத்தல் வெறும் பொறுமை யைக் காத்தல் அல்ல. சமாதானத் தில் நாம் நம்பிக்கையோடு இருக் கிறோம் என்பதன் முகம்காட்ட லாகவே இது இருக்கிறது. "சமா தானத்தின் அருமை பெருமைகளைத் தெரிநதவர்கள் நாங்கள். சமாதானம் மிகவும் பெறுமதியானது. சண்டைபிடி த்து தொடர்ந்தும் அடிபட்டு களை த்து இளைத்துப்போய் நிற்கின்ற அல்லது சண்டையில் வெல்கின்ற சூழ்நிலையில் நிற்கின்றவர்களுக்குக் கூட சமாதானம் தேவையாகவுள் ளது.

சமாதானத்திற்காகச் சுதந்திர த்தை இழந்து விடுவதா? சமா தானத்துக்காக விடுதலையை இழந்து விடுவதா? போன்ற கேள்விகள் எழுகிற போதுதான் சமாதானத்திற் குச் சிக்கல் வருகிறது. எங்களுடைய அடிப்படை உரிமை, சுதந்திரம், விடுதலை என்பவற்றைப் பெற்றுக் கொள்கின்ற வழியிலே ஆயுதம் தாங்கி நின்ற நாங்கள் இன்றைக்கு கோரிக்கைகளையும் பத்திரங்களை யும் தாங்கிக்கொண்டு தேசிய எழுச் சிப் பேரவை என்று முகம் காட்டிக் கொண்டிருக்கிறோம்.

தேசிய எழுச்சிப் பேரவைக்கு ஒரு பரிணாமம் இருக்கிறது. தேசிய எழுச்சிப் பேரவை திடீரென வானத் தில் இருந்து குதித்த ஒரு அமைப்பு அல்ல. அது வரலாற்றின் தேவை யின் அடிப்படையில் வரலாற்றுப் பிள்ளையாக உதித்த இன்னுமொரு அமைப்பாகும்.

தமிழ் மக்களின் விடுதலையை வெல்வதற்காகவும் உரிமையைப் பெறுவதற்காகவும் தேசியத்தை வளர்ப்பதற்கும் தேசிய எழுச்சிப் பேரவை அயராது பாடுபடும். நாம் வீரத தைப் பேசவில்லை. வீரத்தைக்காட்ட வேண்டிய நேரத்தில் வீரத்தினைக் காட்டினோம். தமிழீழ விடு தலைப் புலிகளின் பின்னே மக்கள இருக்கின் றார்களா என்ற ஒரு கேள்வியை-சர்வ தேச சமூகம் எழுப்பிய போது புலிகளின் பின்னே மக்கள் திரண்டு நிற்கின் றார்கள் என்று காட்டிய ஒன்று தான் போர் எழுச்சிக்குழு.

சண்டை சண்டை என்று ஓதிக் கொண்டிருந்த போர் எழுச்சிக்குழு, இனறு தேசிய எழுச்சிப்பேரவையாக மாறி அரசியல் பற்றியும் சமாதானம் பற்றியும் பேசுகின்றது. தமிழீழ விடுதலைப்புலிகளை வெல்ல முடி யாது என்று கண்டு கொண்டதன் பின்னரே ஏகாதிபத்தியமும் சிங்கள அரசும் எங்களுடன் பேசவந்திருக் கிறது. சமாதானத்தை ஒப்பந்தத் தில் எழுதி நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் போர் எழுச்சிக்குழு செயல்படக் கூடாது. போர் எழுச்சிக்குழு பற்றிய பேச்சே இருக்கக்கூடாது.

இந்தச் சமாதானத்தை உண்மை யான சமாதானமாக இலங்கை அரசாங்கமும் பேரினவாதிகளும் ஏற்றுக்கொள்வார்களானால் இந்தச் சமாதானத்திற்கு உண்மையான வர்களாக உழைப்போம்.தேசிய எழுச்சிப் பேரவை என்ற சிந்தனை எமது தலைவர் பிரபாகரனிடம் உதித்தது. அதற்கு நாம் இன்று வடிவம் கொடுத்துள்ளோம். அதற்கு ஒரு யாப்பு உள்ளது. தேசிய எழுச் சிப் பேரவைக்கும் போருக்கும் சம் பந்தம் இல்லை. ஆனால் தேசியத் துக்கும் அதற்கும் சம்பந்தம் உண்டு எனக் குறிப்பிட்டார்.

இவ் வைபவத்தில் தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப் பாளர் கி.பாப்பா உரையாற்றும் போது,

மேடைப் பேச்சு என்பதில் எம க்கு நம்பிக்கை இல்லை.வெறும் வார்த்தைப்பிரயோகத்தில் நம்பிக் கையில்லை.எங்களைப் பொறுத்த வரையில் எங்களுக்குத் தேவை செயல். செயலுக்குத் தேவை அடக் கமான ஆளுமை. இதனை வளர்த் துக் கொண்டால் மக்கள் நிச்சயம் எங்கள் பின்னால் எதற்கும் தயா ரான நிலையில் நிற்பார்கள்.

தேசிய எழுச்சிப்பேரவை மேற் கொள்ள வேண்டிய பல பெறுமதி யான திட்டங்கள் இருக்கின்றன. குடாநாடு தழுவிய ரீதியில் பாரிய அளவில் மரம் நடுகைத்திட்டத் தினை பட்டி தொட்டியெங்கும் நடை முறைப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

இவ்விழாவில் அரசாங்க அதி பரின் பிரதிநிதி க. பாலகிருஸ்ணன், கொள்கை முன்னெடுப்புச் செய லாளர் மா.க ஈழவேந்தன், வண பிதா.சகாயநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (உ-16)

# அரசாங்கம் அபிவிருத்திப் பணிகளிலும் அக்கறை செலுத்த வேண்டும்

## ஜெரமி காட்டர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் இனப்பிரச்சினை களுக்கு தீர்வு காண்பதில் அரசாங் கம் எவ்வளவு அக்கறை காட்டுகின றதோ அதே அளவுக்கு அபிவிருத் திப் பணிகளிலும் நாட்டம் செலுத்த வேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஜெரமிகாட்டர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்ட பத்தில் நடைபெற்ற இலங்கை தொழில் முயற்சியாளர்களுக்கான எட்டாவது விருது வழங்கும் வைப வத்தில் கலந்து கொண்டு உரையாற் றுகையில் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய ஜெரமிகாட்டர் கடந்த கால யுத்தம் காரணமாக வடக்கு-கிழக்குப் பகுதி களின் அபிவிருத்திட்டங்களும் துறைசார் உற்பத்திகளும் பாதிக்கப் பட்டன.

ஆனால் கடந்த இரு வருடங் களாக வடக்கு - கிழக்குப்பகுதி உட் பட அனைத்துப் பிரதேசங்களிலும் அபிவிருத்தியில் ஓரளவு முன்னேற் றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

இவ்வாறான வளர்ச்சிப் போக் கில் நாடு செல்லுமாயின் முதலீட் டாளர்களும் மக்களும் நாடும் நன்மையடையும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-61)


புனர்வாழ்வளிப்பு,அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும்

01) சிவப்பு நாட்டரிசி (புழுங்கல்)
02) அரிசி (தீட்டல் பச்சை)

வழங்கலுக்கான கேள்வி கோரல்

மேற்படி கேள்விக்கு உரிய கால எல்லை பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது.

1. விண்ணப்பிக்கும் கடைசித் திகதி:- 02.01.2004-பி.ப. 2.00மணி
2. கேள்வி திறக்கும் நேரம்:-02.01.2004-பி.ப.3.00மணி(சிவப்புநாட்டரிசி)
3.கேள்வி திறக்கும் நேரம்:-02.01.2004-பி.ப.3.30மணி(அரிசி,தீட்டல் பச்சை)

செ.பத்மநாதன்
அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்.

(C/6997)

# பிரிட்டிஷ் ஆளும் கட்சிக்கான ஆதரவில் திடீர் முன்னேற்றம்

## சதாமின் கைதே காரணமாம்

(லண்டன்)

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் கைது செய்யப்பட்டதை அடுத்து பிரிட்டிஷ் ஆளும் கட்சிக்கான ஆதரவு திடீரென அதிகரித்துள்ளதாக தெரியவருகிறது.

ஈராக்கில் பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்கள் இருப்பதாக அமெரிக்கா கூறியதை ஏற்று பிரிட்டனும் அந்நாட்டுடன் இணைந்து ஈராக் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இத் தாக்குதல் ஆதாரமின்றி நடத்தப்பட்டதாக பல நாடுகளில் இருந்தும் எதிர்ப்புக்கள் எழுந்தன இந்த எதிர்ப்பு அதிகமாக பிரிட்டிஷ் அரசாங்கம் மீது தாக்கத்தை ஏற்படுத்தியதோடு அந்நாட்டின் பிரதமர் ரொனிபிளேயரின் ஆளும் கட்சிக்கான ஆதரவுகளை பெரும் அளவில் குறைந்தது அத்துடன் ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் உள்ளது என்ற பெய்யான கருத்தை பிரிட்டிஷ் பிரதமரே பரப்பினார் என குற்றஞ் சாட்டி அவர் மீது வழக்கும் தொடரப் பட்டது.

இந்த வழக்கிற்கான தீர்ப்பு இன்னும் வழக்கப்படாத நிலையில் கடந்த சனிக்கிழமை ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் கைது செய்யப்பட்ட செய்தி உலக மக்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

இதனையடுத்தே பிரிட்டிஷ் ஆளும் கட்சிக்கான ஆதரவு 2 புள்ளி வீதத்தினால் அதிகரித்து 38 வீதத்தை எட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (து-2)



அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள உயிரியல் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வரும் சுமத்திர வகையைச் சேர்ந்த புலி ஒன் று குட்டி ஈன்றுள்ளது. அழிந்துவரும் விலங்கு வகைகளில் சுமத்திரப் புலியும் ஒன்று. பிறந்து எட்டு வாரமே ஆன இந்த புலிக்குட்டி தனது தாயுடன் கொஞ்சி மகிழ்ந்த காட்சி

# ஈராக்கிற்கு விமானப்படை அனுப்ப ஜப்பான் அனுமதி

(டோக்கியோ)

ஜப்பானின் விமானப்படையைச் சேர்ந்த 30 வீரர்களை ஈராக்கிற்கு அனுப்புவதற்கு அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பை ஜப்பான் நேற்றுமுன் தினம் விடுத்துள்ளது.

ஜப்பான் பாதுகாப்பு அமைச்சு ஈராக்கிற்கு அனுப்பவுள்ள விமானப் படையினர் எதிர்வரும் 26ஆம் திகதி குவைத் ஊடாக அமெரிக்காவின் விமானப்படை முகாமிற்கு அனுப்பப் பட்டு அங்கிருந்து ஈராக்கிற்கு அனுப் பப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (து-2)

# அபிவிருத்தியடைந்த நாடுகளில் அதிகரிக்கும் இராணுவச்செலவு

(நியூயோர்க்)

அபிவிருத்தியடைந்த நாடுகளில் இராணுவச் செலவீனம் அதிகரித்து வருவதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் 11ஆம் திகதி தாக்குதலின் பின்னர் பிரதான கைத்தொழில் நாடுகள் பாதுகாப்பிற்காக அதிக நிதியை ஒதுக்கீடு செய்வதாகவும், கடந்த ஆண்டில் மட்டும் இது 7வீத அதிகரிப்பைக் காட்டுவதாகவும் சர்வதேச நாணய நிதியம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை, அமெரிக்கா உள்ளிட்ட ஏழு பிரதான நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியும் குறிப்பிடத்தக்க அளவு இராணுவத் தேவைக்காகப் பயன்படுத்தப்படுவதாக அந்த நிதியப் பொறுபதிகாரி தெரிவித்துள்ளார். (து-9)

## பிரிட்டனால் அறிமுகப்படுத்தப்பட்ட

# பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு கடும் விமர்சனம் எழுந்துள்ளது

(லண்டன்)

அமெரிக்காவில் செப்ரெம்பர் 11 இல் நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பிரிட்டிஷ் பாராளுமன்ற மூத்த உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிக் குழுவொன்று கடுமையாக விமர்சித்துள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பில் சந்தேகத்திற்கு உள்ளாகும் வெளிநாட்டுக் குடிமக்களை எந்தவிதக் குற்றச்சாட்டும் இல்லாமல் காலவரையறையற்ற முறையில் தடுத்து வைக்கப்படும் இச்சட்டத்தை உடனடியாக நீக்கவேண்டும் என்று இக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

இச்சட்டத்தின்மூலம் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்படுபவர்களுக்கு நியாயமான நீதி கிடைக்காமல்போகும அபாயம் காணப்படுவதாகவும் இக்குழு தெரிவித்துள்ளது.

பயங்கரவாதிகள் பிரிட்டனைத் தாக்கலாம் என்ற அச்சம் இருப்பதை ஏற்றுக்கொண்டுள்ள அந்தக் குழு, பிரிட்டனில் நடைமுறையில் உள்ள இச் சட்டத்தின் மூலம் தனிநபர் உரிமைகள் மீறப்படுவதாகக் கூறியுள்ளது.

அமெரிக்காவில் இடம்பெற்ற செப்ரெம்பர் 11தாக்குதலைத் தொடர்ந்து பிரிட்டனில் அறிமுகப்படுத்தப்பட்ட அவசரகால அதிகாரச் சட்டங்களை மீள் பரிசீலனை செய்வதற்காக பிரிட்டனின் வெளியுறவு அமைச்சகத்தைச் சேர்ந்த டேவிட் பிளமிங்கினால் இக்குழு நியமிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(து-2)



தாய்வானின் தைபீ நகரில் சார்ஸ் நோயாளிகளுக்கான ஹோ பிங் மருத்துவமனையில் முகக் கவசத்துடன் சிறுவர்கள். இராணுவ மருத்துவமனையில் சார்ஸ் நோய் ஆராய்ச்சியாளர் ஒருவருக்கு இந்த நோய் தாக்கியுள்ளது சமீபத்தில் தெரியவந்துள்ளது.

WORLD NEWS உலக தரிசனம்

## அவுஸ்திரேலிய தயாரிப்பில்

# கட்டளையிட்டதும் பணியை நிறைவேற்றும் நவீன ஹெலி

(கான்பரா)

அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் ஆளிலலாது இயங்கும் நவீன ஹெலிகொப்ரர் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

அரை மீற்றர் உயரமும் ஒன்றரை மீற்றர் நீளமும் கொண்ட இந்த நவீனரகக் ஹெலி எந்த நேரத்தில் எங்கே என்ன செய்யவேண்டும்எனப் பணிக்கப்பட்டால் அதைக் கச்சிதமாகச் செய்து முடிக்கும் வல்லமை கொண்டது என இந்தக் ஹெலியைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகள் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இச் ஹெலி ஆளில்லாத அபாயகரமான இடங்களுக்குக் கூடச் சென்று தனது பணியைச் செய்துமுடித்து விட்டுத் திரும்பக்கூடியது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(து-2)



இந்தியா முழுவதும் இந்த ஆண்டு கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. போதிய அளவு மழை இல்லாததால் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே பனிப்பொழிவு தொடங்கிவிட்டது. அதிலும் வட இந்தியாவில் குளிரின் தாக்கம் அதிகமாக உள்ளது. புதுடில்லியில் குளிரில் வாடும் சிறுவர்கள்.

# ஈராக்கில் எவ்வாறான நடவடிக்கை? ஜனவரி 15இல் தீர்மானிக்கப்படும்

## என்கிறார் கோபி அனான்


(நியூயோர்க்)

ஈராக்கின் புனர்நிர்மாணம் தொடர்பாக எவ்வாறான நடவடிக்கைகளை ஐக்கியநாடுகள் மேற்கொள்ளவேண்டும் என்பது குறித்து எதிர்வரும் ஜனவரி மாதம் 15ஆம் திகதி நடைபெறவுள்ள அமெரிக்க மற்றும் ஈராக்கிய ஆட்சிச் சபை ஆகியவற்றுக்கிடையிலான ஒருங்கிணைந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனான் கூறியுள்ளார்.

2003ஆம் ஆண்டு முடிவடைவதையொட்டி ஊடகவியலாளர்களுடனான சந்திப்பொன்றை நியூயோர்க்கில் நடத்திய போதே கோபிஅனான் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்து இதுவிடயம் குறித்து பேசிய கோபி அனான் கடந்த ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி பக்தாத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தால் அங்குள்ள ஐக்கிய நாடுகள் செயலகத்தில் கடமையாற்றிய 22 ஊழியர்கள் கொல்லப்பட்டதை அடுத்து செயலகம் தமது ஊழியர்களையும் அலுவலகத்தையும் பக்தாத்தில் இருந்து வாபஸ் பெற்றமையைச் சுட்டிக்காட்டியதுடன்,

இவ்வாறான பாதிப்புக்களைத் தவிர்க்கும் முறையிலேயே ஈராக்கில் புனர்நிர்மாணப் பணிகளுக்குத் திட்டமிடப்படும் எனத் தெரிவித்துள்ளார்.(து-2)



## இன்னும் ஒரு தகவல்

# பயமும் பாதுகாப்பும்!

ஒருவருடன் நாம் சண்டை செய்கின்றோம் அதில் நாம் ஜெயித்து விடுவதாக வைத்துக் கொள்வோம். நமது மனதிற்குச் சந்தோஷமாகத்தான் இருக்கும். இருந்தாலும் உள்மனதில் ஓர் பயம் உண்டாகலாம் "தோற்றுப் போனவன் சும்மா இருப்பானா? அவன் மறுபடியும் எப்போதும் சந்தர்ப்பம் வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டுதானே இருப்பான்? "

அதனால் வெற்றியின் ஒரு பக்கம் சந்தோஷமாக இருந்தாலும் இன்னொரு பக்கம் பயமாகத்தான் இருக்கும். ஒரு மன்னன் இருந்தான். நிறையப் பேருடன் அவன் சண்டை செய்தான். ஜெயித்தான். பல நாடுகளை வென்றான்.

அதனாலேயே அவன் மனதிற்குள் ஒருவித பயம் உண்டாகி விட்டது. பகை மன்னர்களெல்லாம் படையெடுத்துக்கொண்டு வந்து விட்டால் என்ன செய்வது என்ற பயம். எல்லோரும் வந்து இப்போது இருக்கின்ற இந்த மாளிகையை கைப்பற்றி விட்டால் என்ன செய்வது என்று யோசித்தான்! நடுங்க ஆரம்பித்தான்.

"ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்?" என்று கேட்டார் அமைச்சர். இவன் விபரத்தைக் கூறினான். இரண்டு பேரும் சேர்ந்து ஒரு திட்டம் போட்டனர். அதன பிரகாரம் ஒரு பெரிய மாளிகை ஒன்றைப் புதிதாகக் கட்டினார்கள். அதற்கு யன்னல் எதுவும் கிடையாது. உள்ளே போக வெளியே வர ஒரேயொரு கதவு மட்டும்தான் உண்டு. அதைத் தவிர அந்த மாளிகைக்கு வேறு எந்த வழியும் கிடையாது. ஒரு சிறு துவாரம் தெரிந்தால் கூட அதையும் அடைத்து விட்டனர்.

ஒரேயொரு கதவு வைத்தானே. அந்த வழியைப் பாதுகாக்கவும் ஏராளமான வீரர்களைக் காவலுக்கு நிறுத்தி வைத்து விட்டான். இவ்வளவு செய்து முடிந்த பின்னர் தான் அந்த மன்னனின் மனது திருப்தியடைந்தது.

ஒருநாள் அந்த ராஜாவும் அமைச்சரும் அந்த ஒரு கதவு வழியாக வெளியே வந்தனர். " என்ன அமைச்சரே? எப்படி நமது ஏற்பாடு? " என்று அட்டகாசமாக சிரித்துக்கொண்டே கேட்டார் ராஜா. "அபாரம்" என்றார் அமைச்சர். அவர் வேறு என்ன கூறுவார். இவர்கள் இருவரும் இப்படிப் பேசிக்கொண்டதை அங்குள்ள வீதியோரமாக உட்கார்ந்திருந்த ஒரு பெரியவர் கேட்டார். சிரித்தார்.

அவர் சிரித்ததைப் பார்த்ததும் மன்னனுக்கு கோபம் வந்துவிட்டது. "ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு அந்தப் பெரியவர் கூறினார். "மிகவும் புத்திசாலித்தனமாகத்தான் இந்த மாளிகையைக் கட்டியிருக்கிறீர்கள். நல்ல பாதுகாப்பாகத்தான் உள்ளது. இருந்தாலும் ஒரு குறை தெரிகின்றது" என்றார்." என்ன?" என்று கேட்டார் ராஜா.

வேறு வழியே வைக்காமல் மாளிகை கட்டிய நீங்கள் எதற்காக ஒரேயொரு வழி மட்டும் வைத்திருக்கின்றீர்கள்? அந்த வழியாக எதிரிகள் நுழைந்துவிட்டால் என்ன செய்வது? அதையும் ஒரு கருங்கல் சுவரால் அடைத்துவிடுங்கள். அதற்குப் பின் எதிரிகள் பயம் கொஞ்சம் கூட இல்லாமல் நீங்கள் உள்ளே இருக்கலாம். அதுதான் நல்லது" என்றார்.

மன்னன் யோசித்தான். பளிச் என்று ஒரு யோசனை தோன்றியது. "அது சரி. நீ கூறுவது போல் அந்த ஒரு வழியையும் அடைத்துவிட்டால் இந்த மாளிகை கல்லறை போல் ஆகிவிடுமே!" என்றார். "இப்போது மட்டும் இது எபபடி இருக்கிறது? கல்லறை மாதிரித்தானே இருக்கின்றது" என்றார் பெரியவர். " எதிரி வந்து உங்களைச் சாகடிக்கா விட்டாலும் நீங்களாக ஒருநாள் இறக்கத்தானே போகின்றீர்கள். உங்கள் மாளிகையில் எவ்வளவு யன்னல்களும் கதவுகளும் இருக்கின்றதோ அந்த அளவு வெளி உலகுடன் உங்களுக்குத் தொடர்பு இருக்கிறது. அந்த அளவுக்கு உங்கள் வாழ்விலும் ஓர் இயக்கம் உண்டு. கதவுகளை மூட மூட வாழ்வும் அடைபட்டுப் போகும்.

நான் கூட ஒரு காலத்தில் மாளிகையில் தான் இருந்தேன். அதன் சுவர்களை எவ்வளவு தான் தள்ளிப்போட்டாலும் என் வாழ்க்கைக்கு அவை எல்லைக் கோடுகளாக இருப்பதை உணர்ந்தேன். வாழ்வுக்கு எல்லையே இருக்கக் கூடாது என்று நினைத்தேன். இப்படியாகி விட்டேன். இப்போது என் வாழ்வுக்கு வானம் தான் கூரை. இந்த நிலம் தான் என் மாளிகை. இப்போது தான் என் வாழ்வை முழுமையாக உணமுடிகிறது" என்றார் அந்தப்பெரியவர். அந்த அரசர் ஒரு பெரிய தத்துவததைப் புரிந்து கொண்டார். தனது மாளிகைக்கு நிறைய ஜன்னல்களையும் கதவுகளையும் வைக்கச்சொல்லி உத்தரவிட்டார்.

ஒரு சுடுகாட்டில் ஒரு கல்லறைக்கு மேல் உட்கார்ந்திருந்தான் ஒருவன். அந்த வழியாகப்போன ஒருவன் அவனைப் பார்த்துக்கேட்டான் "ஏனப்பா இப்படி பேய்பிசாசு நடமாடும் இந்த மயானத்தில் வந்து கல்லறைக்கு மேலே உட்காந்திருக்கிறாய்?" என்றார்.

"எவ்வளவு காலம் தான் உள்ளேயே இருப்பது ஒரே புழுக்கமாக இருந்தது. அது தான் காற்று வாங்கலாம் என்று வெளியே வந்தேன்" என்றான் அந்த ஆள்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# மூன்று தேர்தல்களையும் ஒன்றாக நடத்துவது பற்றிப் பரிசீலனை

(கொழும்பு)

அரசாங்கத்தின் நிதிப்பற்றாக்குறையைக் கவனத்தில் கொண்டு அடுத்தவருடம் ஒரே நாளிலேயே ஜனாதிபதி தேர்தல், பொதுத்தேர்தல், மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றை நடாத்துவது பற்றிய சாத்தியக் கூறுகள் குறித்து பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆராய்ந்து வருகிறது.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர் மாநாட்டில் பேசும்போது ஜீ. எல். பீரிஸ் இதுபற்றித் தெரிவிக்கையில், தேர்தல் சீர்திருத்தங்களுக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு இம் மூன்று தேர்தல்களையும் ஒரு சனிக்கிழமையன்று நடாத்துவது பற்றி கவனம் செலுத்திவருகிறது.

அரசியல் அமைப்புச் சபை ஏற்கனவே தேர்வாளர்களைச் சிபார்சு செய்திருந்தும் ஜனாதிபதி சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவை ஏற்படுத்த தாமதித்து வருகிறார். இது மிகவும் பாரதூரமான விடயம். அரசியலமைப்புச் சபை தனக்குள்ள அதிகாரத்தின படி தனது கடமையைச் செய்துள்ளது.

இந்நிலை வருந்தத்தக்கது. இதனாலேயே ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையான சந்திப்பிற்கான நாள் இன்னமும் குறிக்கப்படவுமில்லை.

அத்துடன், இறுதிமுடிவு எடுக்கப்படுவதற்கு காலக்கெடுவும் விதிக்கப்படவில்லை.

பிரதமர் தனது நிலைப்பாட்டை மாற்றவில்லை. அடிப்படை விவகாரங்களில் தீர்வு காணப்படவில்லையெனில் இரு தரப்பினரும் கூட்டுச்சேர்வதற்கான காரணங்கள் எதுவும் இல்லை.

ஜனாதிபதியுடன் பாதுகாப்பு அமைச்சு சம்பந்தமாக சில முரண்பாடுகள் இருப்பினும்,அரசாங்கம் பாதுகாப்பு அமைச்சு மீதான வரவு - செலவுத்திட்டம் நிறைவேற ஒத்துழைத்துள்ளது என்றார்.

(உ-6)

### மலையக மாணவர்களுக்கு தனியான

# பல்கலைக்கழகம் ஒன்று அமைக்க அழுத்தம் கொடுக்க வேண்டும்

## பேராசிரியர் சந்திரசேகரன் தெரிவிப்பு

(கொழும்பு)

மலையகத் தமிழ் மாணவர்களுக்கு தனியான பல்கலைக்கழகம் ஒன்றை அமைப்பதற்கு மலையகத் தமிழ் தலைமைத்துவங்கள் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு கொழும்பு ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக கல்வியியற்துறைப் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

ஹற்றன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியில் நேற்று முன்தினம் ஆரம்பமான மலையகத் தமிழ்க் கூடல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், இலங்கையின் வடக்குகிழக்கு தமிழ் மாணவர்கள் உட்பட பெரும்பான்மை இனத்தவர்கள அனைவருக்கும் தனித் தனியான பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன.

ஆனால் 15 இலட்சம் மலையக மக்கள் வாழுகின்ற மலைநாட்டில் அவர்களுக்கான தனியான பல்கலைக்கழகம் ஒன்று இல்லை.

இலங்கையில் உள்ள 13 பல்கலைக்கழகங்களில் பல்வேறு துறைகளிலும் பட்டப்படிப்புகளை மேற்கொண்டுவரும் சுமார் 50 ஆயிரம் மாணவர்களில் மலையக மாணவர்களின் எண்ணிக்கை 200ற்கும் குறைவாகவே உள்ளது எனவும் சுட்டிக்காட்டினார். (தி-61)

# இராசி பலன்

**21.12. 2003**

**(மார்கழி 06, ஞாயிறு)**

| | |
|---|---|
| திரயோதசி | மு.இ.8.25 வரை |
| விசாகம் | மு.ப.07.09 வரை |
| அனுசம் | பி.இ 5.30 வரை |
| இராகுகாலம் | 04.54-06.24 |
| சுபநேரம் | 09.24-10.54 |

பிரதோச விரதம்

**மேடம்**
உடல்நலக் குறைவு, பிரயாணக் கஷ்டம், எதிர்பாராத பிரச்சினை, முயற்சி தாமதம்.

**இடபம்**
நண்பர்கள் சந்திப்பு, குடும்ப நலம், காரிய அனுகூலம், போசன நன்மை.

**மிதுனம்**
புதிய திட்டமிடல், சிந்தனை மிகுதி, பெரியோர் உதவி, காரிய நன்மை.

**கடகம்**
புத்திரரால் கவலை, உடல் நலக்குறைவு, முயற்சி தாமதம், திடீர் நன்மை.

**சிங்கம**
மாதாவழி உறவு, வேலையில் ஆர்வம், எடுத்த கருமங்கள் தாமதமாகும், தனவிரயம்.

**கன்னி**
அன்னியர் சந்திப்பு, தொழில் சிந்தை, விருந்துபசாரம், காரிய அனுகூலம்.

**துலாம்**
கோபப்படுதல், உறவினர் வருகை, வேலைக் கஷ்டம், முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
தெய்வ தரிசனம், நல்ல முயற்சி, பெரியோர் உதவி, போசன நன்மை.

**தனுசு**
பிரயாண அலைச்சல், ஆரோக்கியக் குறைவு, முயற்சி கைகூடும், தனவிரயம்.

**மகரம்**
எதிர்பாராத நன்மை, தெய்வ சிந்தை, காரிய சித்தி, பொருள் சேர்க்கை.

**கும்பம்**
எடுத்த காரியம் கைகூடும், மேன்மை, புதிய சிந்தை, தொழில் நன்மை.

**மீனம்**
தேகாந்திர வாசம் புதிய திட்டமிடல், உடல்நலக் குறைவு, முயற்சி தாமதம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

# மீன் பிடிச் சமூகங்களுக்கு யு. எஸ். எயிட் நிறுவனம் உதவி

(கொழும்பு)

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள 6 மீன்பிடிச் சமூகங்களுக்கு உதவுமாறு சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க ஏஜென்சிக்கு (யு.எஸ். எயிட்) இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெவரி லன்ஸ்ரெட் அறிவித்துள்ளார்.

இதன்படி இவ் ஏஜென்சி, பொத்துவில் தொடங்கி மட்டக்களப்பு வரையான கிழக்குக் கரையோரத்தில் உள்ள மீன்பிடிச் சமூகங்களுக்கு உதவிகளைச் செய்து வருகின்றது. இவ் உதவிகளை சகல சமூகத்தவரும் சுழற்சி முறையில் பயன்படுத்துவார்கள்.

இந்த வகையில், இச் சமூகங்களுக்கு மீன்பிடித்தேவைகள், படகுகள், எஞ்சின்கள், வலைகள் என்பன வழங்கப்பட்டுள்ளன. இவை அனைத்திற்குமாக ஒரு இலட்சத்து 60 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் கிட்டத்தட்ட 5 ஆயிரத்து 200 மீனவர்களும் அவர்களின் குடும்பங்களும் நன்மையடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

மீன்பிடிச் சமூகங்களுக்கு வழங்கும் இவ் உதவிகள் பற்றி அமெரிக்கத் தூதுவர் கருத்துத் தெரிவிக்கையில், யுத்தம் இடம்பெற்ற காலங்களில் இச் சமூகத்தவர் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வந்தனர். இச் சமாதானச் சுழ்நிலையில் அவர்கள் தமது வாழ்க்கை வசதிகளை மேம்படுத்த நாம் உதவி வருகிறோம் என்றார்.

அத்துடன், அம்பாறையில் திறக்கப்பட்டுள்ள யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் அலுவலகம் இதுவரை 3 இலட்சத்து 77 ஆயிரம் டொலர்கள் பெறுமதியான 23 நன்கொடைகளை வழங்கியுள்ளது. (உ-6)

# பொலிஸாரின் மனோநிலையை மாற்றுவதே எனது முதல் பணி

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த மனநிலையில் உள்ள பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் மற்றும் அதிகாரிகளை முன்னைய நிலைக்குக் கொண்டு வருவதே எனது முதலாவது பிரதான கடமை என புதிய பொலிஸமா அதிபர் இந்திரா டிசில்வா தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபராக நியமனம் பெற்ற பின்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர்,அவ்வாறு அவர்களை யுத்த மனோநிலையில் இருந்து திசைதிருப்பினால் மனித உரிமைகளுக்கு மதிப்புத்தரும் அதிகாரிகளாக அவர்களை மாற்றமுடியும்.

இதனால், மக்களிடையே அதிக ஒத்துழைப்புக் கிடைக்கும். இது குற்றச்செயல்களைக் குறைப்பதற்கும் வழிகோலும் எனவும் தெரிவித்தார். (தி-61)

## வலம்புரியின் 4வது ஆண்டு நிறைவு

# கவிதை மாலை

### நலம் செய்த வலம்புரியே

ஈரிரண்டு அகவையினில்
ஈடு இணை அற்ற பணி
நாடு பெற்றுயரவே
நலம் செய்த வலம்புரியே

பாரெலாம் உன்பெருமை
பகரப் பணி தொடர்வாய்
பரம் பொருளின் அருள் பெற்று
பல்லாண்டு நீ வாழ் வாய்

எஸ். துரைமகள.

### எண்ணியே மகிழ்கிறோம்

நான்காண்டுகளில் நல்நிலம் சிறக்க
சங்குநாதமுடன் இசை ஒலி எழுப்பி
நான்கொடு ஓராண்டு சேர்ந்தோடிய
நாழிதழே! வலம்புரியே நலம்பெற வாழ்க!

தன்னந் தனியனாய் குறுகிய வளத்துடன்
தன்னிகரில்லாத் தமிழ்ப் பணி ஆற்றிடும்
உன்னருஞ் சேவை எண்ணியே மகிழ்கிறோம்
உயரிய பாதையில் நீ நிச்சயம் செல்வாய்

அபிர்ராஜன்.

### வலம்புரியே வாழ்கவே!

வலம்புரியே உன்னுடைய
செந்தமிழ் சிலம்பொலியின்
அலங்காரம் கண்டுமே
அகிலமே போற்றுகிறது
நலமாகப் பல்லாண்டு
வாழ்கவே நிலமதில்

சாந்தன்.

### வாழ்த்துகிறேன்

என் வளர்புத்தாய்க்கு
நான் காண்டு நிறைவில்
வாழ்த்துக்கள்
கூட்டுக் குடும்பமாய்
நாட்டுக்கு நல் சேவையாற்றும்
வலம்புரிக் குடும்பமே நீ
வாழ்க பல்லாண்டு

பத்திரிகைத் தத்துவத்தை
பதியமாய் கடைப்பிடிக்கும்
பண்பாளர் பல முண்டு
பனைமரம் போல்
பல்லாண்டு உரமுடனே உன்
பணி சிறக்க வாழ்த்துக்கள்

ஜோ. ஜெஸ்ரின்.

### திருவருளை இறைஞ்சி வாழ்த்துகிறேன்

நான்கு ஆண்டுகளை நிறைவு செய்து ஐந்தாவது ஆண்டில் காலடி வைக்கும் எனது அபிமான வலம்புரி நாளிதழ் சீருடனும் சிறப்புடனும் மேலும் நல்ல முன்னேற்றம்கண்டு வாழவேண்டும்; நடுவு நிலைமையோடு திகழவேண்டும் என்று எல்லாம் வல்ல திருவருளை இறைஞ்சி மனமார வாழ்த்துகின்றேன்

வாழ்க வலம்புரி!
வளர்க அதன் நற்பணி!

செ.மதுசூதனன்

## யாழ். இராணுவத் தளபதி

# பிரதேச செயலர்களை சந்தித்து கலந்துரையாடுவார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுடனான யாழ். மாவட்ட புதிய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவின் சந்திப்பு ஒன்று எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இச் சந்திப்பில் பொதுமக்களுக்கும் இராணுவத்தினர்க்கும் இடையிலான சமுக உறவைக் கட்டியெழுப்பல் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது.

இதேவேளை, கடந்த 24 ஆம் திகதியன்று யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்ற இவர், நேற்று முன்தினம் பொதுமக்களின் பிரதிநிதிகள், சயமப் பிரமுகர்கள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருப்பதும் தெரிந்ததே.

(உ-3,7)

# தமிழனே விழிப்பாய் இரு...!





# தமிழ் மக்களை ஒன்று சேர்க்கின்ற மிகப் பெருந் தலைவன் பிரபாகரனே

## அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரண்டால் தென்னிலங்கையில் எந்தக் கட்சி ஆட்சி



யமைத்தாலும் அல்லது எவ்வாறான அரசாங்கம் அமைக்கப் பெற்றாலும் எமது காலடியில் மண்டியிட வேண்டிய நிலை ஏற்படும்.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சட்டத்தரணியும பாராளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரைவிநாய மூர்த்தியின் சேவை நலன் பாராட்டு விழா யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அவ் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு - கிழக்கு மற்றும் மலையகத் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரண்டால் குறைந்தது 40 நாடாளுமன்ற உறுப்பினர்களையாவது பெற்றுக் கொள்ளமுடியும். இதன் மூலம் இனப் பிரச்சினைக்கான தீர்வை மிகவும் ஆணித்தரமாக தமிழர் தரப்பினூடாக நாடாளுமன்றத்தில் வலியுறுத்த முடியும். தமிழ்மக்களை ஒன்று சேர்க்கின்ற, ஓரணியில் திரள வைக்கின்ற மிகப்பெரும் தலைவர் பிரபாகரனே. அந்த வகையில் தமிழீழத் தேசியத் தலைவரை நான் ஆதரிக்கிறேன். நான் அரசாங்கத்தின் ஒரு அமைச்சராக இருக்கின்ற போதும் எந்தவித ஒளிவு மறைவுமின்றி இதனைத் தெரிவிக்கின்றேன். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச ரீதியாக அங்கீகாரம் கிடைத்திருக்கின்றது. சர்வதேச ரீதியில் அவர்களால் தங்களுடைய ஆளுமையை ,வினைத்திறனை வளர்த்துக் கொண்டுள்ளார்கள். தமிழ் மக்கள் சிங்கள மக்களுக்கு அதிகாரப் போர் தொடுக்கவில்லை. ஆனால் அவர்கள் எங்களை அழிக்க நினைக்கிறார்கள். இதனால் தமிழ் மக்கள் ஒரு தற்காப்பு முயற்சியிலேயே ஈடுபட்டார்கள். தங்களைக் காப்பாற்றிக்கொள்ள ஆயுதம் ஏந்தினார்கள். ஆயுதம் ஏந்திய பின்னர் தான் நாட்டில் வன்முறைகள் ஆரம்பித்தன என்று சிலர் எண்ணுகிறார்கள். வன்முறையின் அடக்கு முறையின் விளைவாகவே ஆயுதம் ஏந்த வேண்டிய நிலை தோன்றியது என்றார்.

நிகழ்வில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார், கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன், நல்லை ஆதீன முதல்வர், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ், யாழ் .அரச அதிபர் செ.பத்மநாதன், பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, பேராசிரியர் சிவச்சந்திரன் உட்பட பெருமளவானோர் கலந்து கொண்டனர். (த)

# யாழ்.மாவட்டத்தில் தடுப்பு மருந்தேற்றல் திருப்தி

## உயர் அதிகாரி தெரிவிப்பு

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில் 5 வயதுக் குட்பட்ட சிறுவர்களின் தடுப்பு மருந்தேற்றல் திருப்திகரமாய் உள்ளதாக சுகாதார போசாக்கு நல நோன்பு அமைச்சின் தடுப்பு மருந்தூட்டல் நிகழ்ச்சித் திட்ட உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் அமைச்சின் உயர் அதிகாரிகளும், தாதிகள் பயிற்சி பாடசாலையின் இறுதியாண்டு தாதிப் பயிலுநர்களும் இவ் வாய்வு நிகழ்வுகளில் பங்குபற்றினர்.

கடந்த கால யுத்தநிலைமையில் மிகவும் பாதிப்படைந்த யாழ்ப்பாணத்தில் வைத்திய அதிகாரிகள் இல்லாமை, ஆளணிகள் பற்றாக்குறை, வாகனங்கள் மற்றும் பல வற்றில் பற்றாக்குறையிருந்தபோதிலும், உரிய வயதுகளில் சரியான முறைகளில் இத்தடை மருந்தூட்டும் திட்டம் நடைபெற்றுவருகிறது.

மேலும் தடுப்பு மருந்தூட்டல் நிகழ்சிகளுக்கு பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு நோய் பரவாது பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் மற்றும் குழந்தை/வளர்ச்சி பதிவேட்டின் முக்கியத்துவத்தையும் நன்கு அறிந்திருப்பதை இவ் ஆய்வுகளில் இருந்து அவதானிக்கமுடிகிறது.

வெளிக்கள சுகாதார உத்தியோகத்தர்களின் சேவையும் மேற்பார்வையும் இத்திட்டம் நன்கு செயற்படுத்தப்பட்டமைக்கு காரணமாக அமைந்துள்ளது எனவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (தி-252)

## ஈ.எஸ். பேரம்பலம் சக நிறுவனம்

# கிளி.ஆஸ்பத்திரிக்கு பல வழிகளிலும் உதவி

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளால் சேதமடைந்து, தற்போது புனரமைக்கப்பட்ட நிலையில் மீண்டும் அதன் சொந்த இடத்தில் இயங்கிவரும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு ஈ.எஸ். பேரம்பலம் சக நிறுவனம் உபகரணப் பொருட்கள் பலவற்றை அன்பளிப்புச் செய்துள்ளது.

பதில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பா.யூடிரமேஸ் செபக்குமாரின் வேண்டுகோளுக்கமைய, மேற்படி நிறுவனத்தால் இவ் வைத்தியசாலைக்கு தொலைக் காட்சிப் பெட்டி, டெக் மற்றும் அன்ரனா உட்பட தேவையான பல உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

ஆளணி வளப் பற்றாக்குறை மற்றும் போதிய கட்டட வசதிகளற்ற நிலையில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வரும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் தினமும் சுமார் ஆயிரத்து 250 நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனராயினும் இங்கு 4 மருத்துவர்களே சேவையாற்றி வருகின்றனர். நிந்நிலையில் நோயாளர்கள் தமக்குரிய சிகிச்சைகளைப் பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தை பயனுள்ள வகையில் போக்குவதற்கு ஏதுவாகவும், சுகாதார ஆலோசனைகள் மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகள் பலவற்றைப் பெற்றுக்கொள்ளத் தக்க வகையிலுமே ஈ.எஸ். பேரம்பலம் சக நிறுவனத்தால் இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

# திட்டமிட்ட வகையில் தமிழர்களின் கல்வி

# புறக்கணிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர்களின் கல்வி திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாதெனத் தெரிவித்துள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், இது விடயத்தை அனைத்துத் தரப்பினரும் கவனத்தில் எடுத்து, பாதிக்கப்பட்ட மாணவர்களிற்கு நீதியான தீர்வு கிடைக்க முயற்சி எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் யாழ். பல்கலைகழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில்,

யாழ். மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியில் மேற்கொளளப்படும் சுரண்டல்கள், யாழ். கல்விச் சமூகத்தை பெரும் அதிர்ச்சிக்கும் ஆத்திரத்திற்கும் உள்ளாக்கியுள்ளன. கடந்த ஆண்டில் அதாவது 2002/ 2003(ஏ) கல்வியாண்டில் யாழ்.மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்டக் கோட்டா எண்ணிக்கையில் பெருங் குறைப்பு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் அனைத்துத்துறை சார்ந்த மாணவர்களும் பாதிக்கப் பட்டுள்ளனர். ஆனால்,வழித்துக் கொண்ட ஒட்டுமொத்த யாழ். கல்விச் சமூகம் எடுத்துக்கொண்ட அயராத முயற்சியும் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்பும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பல்கலைக் கழக அனுமதியைப் பெற்றுத் தந்தன.

குறிப்பிட்ட கற்கை நெறி ஒன்றுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படும் விதமானது பல்கலைக் கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் பல்கலைக்கழக அனு மதிக்கான முதற் பத்திர கைநூலில்(First Form) பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
1) தவளாவிய திறமையின் (Merit) கீழ் 40%
2)மாவட்ட கோட்டாவின் (Quota) கீழ் 55%
3) கல்வியில் பின்தங்கிய மாவட்டத் திற்கான அனுமதியின் (Educationally disatrandanged distraict) கீழ் 5%

ஒரு குறிப்பிட்ட கற்கை நெறிக்கு மாணவர்களை தெரிவு செய்யும் போது,மேலே (1),(2)ஏதாவது ஒரு மாவட்டத் திற்கு ஒதுக்கப்படும் இடங்கள் அடிப்படைக் கல்வியாண்டான 1993 /1994இல் ஒதுக்கப்பட்ட இடங்களை விட குறையாதவாறு உறுதி செய்யப்படும். இதற்கமைவாக (2), (3) என்பன ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தின் சனத்தொகை வீதத்திலும் குறித்த துறைக்கான மொத்த அனுமதியிலும் மட்டுமே தங்கியுள்ளது.

யாழ். மாவட்டத்தின் சனத்தொகை கணக்கெடுப்பு நடைபெறாததால் (2),(3) இல் தெரிவாகும் மாணவர் எண்ணிக்கை குறிப்பிட்ட கற்கை நெறிக்கான மொத்த அனுமதியில் மட்டுமே தங்கியுள்ளது. மேலதிகமாக 1993/1994 பொறியியல் பீடத்திற்கு மொத்த அனுமதி- 698.யாழ்ப்பாணம் மாவட்ட கோட்டா 42. எனவே இதைவிட குறையாது பேணப்பட வேண்டும். ஆனால் இம்முறை யாழ். மாவட்ட கோட்டா (Mpr)-26 (?). இவ்வாறு தொடர்ச்சியாக படிப்படியாக மேற்கொள்ளப்பட்டுவரும் குறைப்பினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| கல்வியாண்டு | பொறியியல்துறை மாவட்ட கோட்டா | மொத்த அனுமதி (பொறியியல்துறை) |
|---|---|---|
| 1999/2000 | 34 | 871 |
| 2000/2001 | 33 | 926 |
| 2001/2002 | 34 | 974 |
| 2002/2003 (MPR) | 31 | 870 |
| 2001/2003 (MPR) | 18+12=30 | 870 |
| 2003/2004 (MPR) | 26 | 861 |

இதனை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திய பல்கலைக கழக மாணியங்கள் ஆணைக குழு தொடர்ந்து வந்த காலங்களில் பல்கலைக்கழக அனுமதியில் அதிகாிப்பு என்ற மாயத்தோற்றத்தை உண்டு பண்ணி பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்ட கோட்டா எண்ணிக்கையை குறைத்து கொண்டே வந்துள்ளது.

1993/1994 ல் யாழ்ப்பாணம் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கப்படவில்லை.எனினும் தற்காலத்தில் பின்தங்கிய மாவட்டமாகவே அறிவிக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய மாவட்டமாக அறி விக் கப்பட்ட பின் உண்மையில் மாவட்ட கோட்டா அனுமதி + பின் தங்கிய மாவட்ட கோட் டா அனுமதி இரண்டும் சேர்த்து 42லும் அதிகமாகவே காணபட வேண்டும். எனினும் அது இவ்வாறு நிகழவில்லை.இவ்வருடம் பொறியியல் துறையுடன் சேர்த்து பௌதீக விஞ்ஞானத்துறையிலும் பெரும் பாதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-4)

இவ்வாறு தொடர்ந்து வரும் கல்வியாண்டுகளில் மாவட்டக் கோட்டா எண்ணிக்கையில் குறைப்பு மேற்கொள்ளப்பட்ட நிலையிலும் தீவளாவிய (Merit) திறமையின் அடிப்படையில் தெரிவானோரின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டதாலும் யுத்த சூழ்நிலை தொடர்ந்ததாலும் பல இடர்களை யாழ். சமூகம் எதிர் கொண்டதாலும் இவ் விடயத்தில் யாழ். கல்விச் சமூகம் வாழா விருந்தது.

# கோழித் திருடர் அதிகரிப்பு

(கோப்பாய்)

நவநாகரிக உடையணிந்து நல்லவர்கள் போல் உலவி, கோழிகளைத் திருடும் பேர்வழிகள் கோப்பாய்ப் பகுதியில் அதிகரித்திருப்பதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மேற்படி நபர்களை மடக்கிப் பிடிக்கும் நடவடிக்கைகளில இப்பகுதியில் இயங்கும் விழிப்புக் குழுக்கள் கண்ணும் கருத்துமாக ஈடுபட்டு வருவதாகவும தெரிவிக் கப்படுகிறது. (உ-79)

# விசாரணைஆரம்பம்

(கொழும்பு)

பாதாள உலகக் கோஷ்டியின் தலைவர் ஒருவர் தப்பிச்சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய இரு பொலிஸ் அதிகாரிகள் மீதான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி இரு பொலிஸ் அதிகாரிகளும் கடந்த புதன்கிழமை கங்கொடகல நீதிமன்றத்தில். ஆஜர் படுத்தப்பட்டதாக மேல் மாகாண தென்பகுதிக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மாஅதிபர் கே.பி.ரி.பத்திரண தெரிவித்துள்ளார்.

மேற்படி, விவகாரம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான விசேட பொலிஸ் குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-18,630

# பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணிகள்

(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிந்த கல்விப் பொதுத்தராதர (சா/த) பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பணிகள் எதிர்வரும் 26ஆம்திகதி யாழ். குடாநாட்டில் ஆரம்பமாகவுள்ளன.

மேற்படி வினாத்தாள்கள் திருத்தும் பணிகள் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை மற்றும் யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றில் நடைபெறவுள்ளன.

அதேவேளை, கடந்த 7ஆம் திகதி நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத் தாள்கள் திருத்தும் பணிகள் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப்பாட சாலையில் கடந்த 12ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன.

இப்பணிகள் யாவும் எதிர்வரும் 23ம்திகதியளவில் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-37)

# ஜனாதிபதியின் ஊடகக்கொள்கை

# முரண்பட்ட போலி நாடகம்

## அமைச்சர் ஹேமகுமார நாணயக்கார கண்டனம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் ஊடகக் கொள்கை போலி நாடகம் என்பதுடன், முன்னுக்குப் பின் முரணாகவும் உள்ளது என அமைச்சர் ஹேமகுமார நாணயக்கார குற்றம் சாட்டியுள்ளார்.

பாராளுமன்றில் கடந்த புதனன்று இடம்பெற்ற ஊடக அமைச்சு மீதான விவாதத்தின் போது மேற்கண்டவாறு குற்றஞ் சாட்டிய அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

அரச ஊடகத்தினை அரசியல் ஆதிக்கத்தில் இருந்து விடுவிக்கும் நோக்குடனேயே ஜனாதிபதி குழுவொன்றை நியமித்துள்ளார். ஆனால், அதன் பொறுப்பாளராக பொ.ஐ.மு. அரசியல்வாதியும் தெஹிவல- கல்கிசை மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான கேசரலால் குணசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் லேக்ஹவுஸ் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன்,சுதந்திரக்கட்சி அமைப்பாளரான ஹட்சன் சமரசிங்கவை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைவராக ஜனாதிபதி நியமித்துள்ளார். இவ்வழிகளில் அவர் ஊடகத்துறையை அரசியல் ஆதிக்கத்தில் இருந்து விடுவிக்க முனைகிறார் என்றார்.

பொ.ஐ.மு. எம்.பி. அனுரா பிரியதர்ஷன யாப்பா இவரது உரையை இடைநிறுத்தி ஜனாதிபதி ஊடகத்துறையை மேலும் சுயாதீனப் படுத்தவே நடவடிக்கை எடுத்து வருகிறார் என்றும் ஜனாதிபதி ஊடக அமைச்சை பொறுப்பேற்க முன்னர் அரச ஊடகத்தில் ஒழுக்கம் தரங் கெட்டிருந்தது. ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னர் தற்போது இந்நிலை மாறிவருகிறது எனக் குறிப்பிட்டார். (உ-6)

# இலைச்சுருட்டி பீடையின் தாக்கம் குறித்து ஆலோசனை

யாழ்.மாவட்டத்தில் தற்போது நெற் பயிர்களில் இலைச்சுருட்டி அல்லது இலைமடித்துக்கட்டி பீடையின் தாக்கம் அதரிகரித்து வருவது அவதானிக்கப்பட்டிருப்பதாக உதவி விவசாய பணிப்பாளர் ச.சின்னத்துரை அறிவித்துள்ளார்.

எனவே விவசாயிகள் தமது நெற்பயிர்களைக் கூர்ந்து அவதானிக்குமாறும் அவர் கூறியுள்ளார்.

தற்போதைய காலநிலை இந்தப் பீடையின் பெருக்கத்திற்கு சாதகமாக இருப்பதுடன் தாக்கப்பட்ட பயிரிலைகள் நீளமாக சுருட்டப்பட்டு அல்லது இலைகள் மடிக்கப்பட்டு இருப்பது அவதானிக் கப்பட்டுள்ளது.

இந்தப்பீடைப் பயிரின் எல்லாப் பருவங்களிலும்,தாக்கக்கூடியது.

தாக்கப்பட்ட இலையின் சுருலை அல்லது மடிப்பை விரித்துப் பார்க்கும் போது அவற்றினுள் பழுப்பு வெண்னிறமான புழுவையோ அல்லது எச்சங்களையோ காண முடியும்.

இலைகளிலுள்ள பச்சையத்தை இப்புழுக்கள் உணவாக உட்கொள்வதனால் தாக்கப்பட்ட பயிர் இலையின் நுனிப்பகுதி வெள்ளை நிறமாகக் காணப்படும்

இந்தத் தாக்கத்தை பயிரில் அவதானித்தால் உடன் குளோறோபைறி பொஸ் பூச்சி நாசினி மருந்தை எடுத்து ஒரு அவுன்சை மூன்று கலன் நீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு 40 கலன் மருந்துக்கலவை என்றரீதியில் விசிறி இதன் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியும் .

கிருமிநாசினி மருந்து விசிறிய பின்னர் 5அல்லது 6 மணிநேரம் மழை பெய்யாதிருப்பதும் முக்கியமானது.

இதேவேளை நெல்வயலில் நீர் தேங்கியிருக்கும் இடங்களில் கால் ஏக்கருக்கு 200 கிலோக்கிராம் சீமைக்கிழுவை இலை அல்லது வெட்டிய எருக்கலை இலை அல்லது நொச்சிஇலைகளை இடுவதால் இது போன்ற தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் நடமாட்டத்தினைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

# சீன அமைச்சர் குழு பிரதமரைச் சந்திப்பு

(கொழும்பு)

மக்கள் சீனக் குடியரசின் திட்டமிடல் அலுவல்கள் அமைச்சர் டியூஜியாங் குழுவினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கடந்த வியாழக் கிழமை சந்தித்துள்ளார்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற இச் சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார அபிவிருத்தித்திட்டங்களை மேம்படுத்துதல், அரசியல் நிலைவரங்கள் குறித்து ஆராயப்பட்டன.

அத்துடன், தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் அதன் இடைநிறுத்தம், இலங்கைக்கான நிதி உதவி என்பன குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன. (தி-61)

# வேலைக்கு விண்ணப்பிக்கும் பட்டதாரிகளின் வயதெல்லையை 35 ஆக அதிகரிக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆங்கில மொழி மூல ஆசிரியர்கள்,மற்றும் கணக்காய்வாளர் தரம் II ன் IIக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது அதற்கு விண்ணப்பிக்கும் பட்டதாரிகளின் வயதெல்லையை 30 இல் இருந்து 35 ஆக அதிகரிக்குமாறு யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக, நிதியமைச்சர் கே.என். சொக்ஸி கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு மற்றும் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்க்கும் கடிதங்கள் அனுப்பி வைக்கபபட்டுள்ளன.

அக்கடிதத்தில், பட்டம் பெற்ற பின்பும் 3,4 வருடங்கள் வேலைக்காகக் காத்திருக்கின்ற நிலையே யாழ். மாவட்டத்தில் காணப்படுகின்றது.

இதனால் அவர்கள் வேலைக்கு விண்ணப்பிக்கும் பட்டதாரிகள் பலர் 30 வயதைக் கடந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

இந்நிலையில் வேலை வாய்ப்புக்களுக்கு வயதுக்கட்டுப்பாடு விதிப்பது அவர்களின் படிப்பை மதிப்பற்றதாக்குவதோடு அவர்களை விரக்கிதியின் விளிம்பிற்கு தள்ளுவதாகவும் உள்ளது.

எனவே அவர்களது எதிர் காலத்தையும் நாட்டின் அபிவிருத்தியையும் பொருளாதாரத்தையும் கருத்தில் கொண்டு பட்டதாரிகளின் வயது வரம்பை 35 ஆக அதிகரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# 2800 பட்டதாரிகளுக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

சரசவிசவிய என்ற திட்டத்தின் கீழ் பட்டதாரிகள் பலருக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

இவ்வருடம் செப்ரெம்பர் மாதம் 15 ஆம்திகதி முதல் இதுவரை 2 ஆயிரத்து 800றகும் மேற்பட்ட பட்டதாரிகள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளார்கள் என இத்திட்டத்தின் தலைவர் விமல் சமரக்கொடி தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்திற்கு உலக வங்கி ஒரு கோடி டொலர் நிதியை நன்கொடையாக வழங்கியுள்ளது. இப்பட்ட தாரிகளுக்கு பயிற்சிக் காலத்தில் கணனி, ஆங்கில அறிவு ஆகியவற்றைப் போதிக்கவும் சுமார் 40 ஆயிரம் ரூபாவினை வழங்கத் தயாராக இருப்பதாகவும் விமல் சமரக் கொடி மேலும் தெரிவித்துள்ளார். (வ)

# இலங்கைக்கான நிதி உதவியை 100 கோடியால் அதிகரிக்குமாறு ஐரோப்பியப் பாராளுமன்றில் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கான நிதி உதவிகளை மேலும் 100 கோடி ரூபாவால் அதிகரிக்குமாறு ஐரோப்பியப் பாராளுமன்றத்தில் கோரிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பியப் பாராளுமன்றத்தில் அங்கம வகிக்கும் இலங்கைப் பிரஜை நிரஞ்சன் தேவாதித்திய, அதன் வரவு செலவுத் திட்டதிற்கான சிறப்புத் தூதுவர் ஜோன் புல்டர் ஆகியோர் கடந்த வியாழக்கிழமை இக்கோரிக்கையை முன்வைத்தனர். ஐரோப்பியப் பாராளுமன்றததினால் ஒதுக்கப்படும் இந்நிதி இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் புனர்வாழ்வுத் திட்டங்களுக்குப் பயன படுத்தப்படும் என நிரஞ்சன் தேவாதித்திய கோரிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றும்போது தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஐரோப்பியப் பாராளுமன்றம் இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக அதன் வரவுசெலவுத் திட்டத்தில் 200 கோடி ரூபா நிதியை ஒதுக்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. (தி-61)

## பதவி வெற்றிடம்

பிரபல்யமான காப்புறுதிக் கம்பனிக்கு விற்பனை இணைப்பாளர் தேவை.
பகுதி நேரம் கடமையாற்றவிரும்புபவரும் விண்ணப்பிக்கலாம்.
கல்வித் தகமை :- க.பொ.த (சா/த) கணிதம் திறமைச்சித்தி உட்பட ஆறு பாடம் சித்தி அடைத்திருக்கவேண்டும்.
குறிப்பு :- தெரிவு செய்யப்பட்டவர்கள் மட்டும்நேர்முகப் பரீட்சைக்கு அழைகைப்படுவர்.
முடிவுத்திகதி 31.12.2003

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி
விளம்பர இலக்கம்-299,
மே/பா வலம்புரி 15,வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம். (C/6998)


## கணக்கீட்டுப்பரீட்சை

இலங்கை கணக்கீட்டு தொழில் நுட்ப நிறுவனப் பரீட்சைகள், முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

இன்றும் எதிர்வரும் 27,28ஆம் திகதிகளிலும் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ள இப்பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 135 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். (உ-52)

## பரிசளிப்பு விழா

ஏழாலை புனித இசிதோர் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் ஒளி விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அதிபர் க. ஜெபராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பங்குத்தந்தை அருட்திரு பா.பி.இராஜசிங்கம், உடுவில் கல்விக்கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக இளைப்பாறிய முன்னாள் அதிபர் க.சூசைதாஸ், ஏழாலை கிழக்கு கிராம சேவையாளர் ச.தவராசா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (தி-116)


## மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.
### பகிரங்க பிஸ்கால் ஏலவிற்பனை

ஆறுமுகம் ஏகாம்பரம்
- வழக்காளி
ஏகாம்பரம் விவேகானந்தன்,
தலையாழி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
- பிரதியடப்பட்ட வழக்காளி

வழக்கு இல:- ஈடு/1848 எதிராக

முத்தையா வில்லியம் இராசலிங்கம்,
இல. 63, டேவிட்சன் றோட்,
பம்பலப்பிட்டி, கொழும்பு.
- எதிராளி-

2003.11.03ம் திகதி இம்மன்றினால் இடப்பட்ட கட்டளையின்படி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றப் பிஸ்காலாகிய துரைச்சாமி சிறீமோகன் ஆகிய என்னை அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைவாகவும், எனக்களிக்கப்பட்ட விற்பனவு அதிகாரத்திற்கமைவாகவும் இவ்விற்பனையை நடாத்த மன்று நியமித்துள்ளதால், இதன்கீழ் உள்ள ஆதன அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனத்தை குறிப்பிட்ட ஆதனத்தில் நின்று 2004ஆம் ஆண்டு தைமாதம் 22ம் திகதி வியாழக்கிழமை (2004.01.22) காலை 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறியத்தருகின்றேன்.

**தீர்வைத் தொகை**

மேற்குறித்த எதிராளி வழக்காளிக்கு ரூபா 200, 000/- ரூபாவும் மேலும் ரூபா 100, 000, 00 க்கு வருடமொன்றிற்கு நூற்றுக்கு 48% வட்டிவீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1984ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 30ஆம் திகதியில் இருந்து தீர்வைத் திகதியாகிய 1985ம் ஆண்டு ஆனிமாதம் 28ந் திகதி வரையுமான வட்டியும், அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான நூற்றுக்கு 12% வீத வட்டியும், வழக்குச் செலவு ரூபா 8,082, 45/-வும் கொடுக்கப்பட வேண்டியுள்ளது. அதில் 2003.01.09இல் எதிராளியால் செலுத்தப்பட்ட ரூபா 150,000/- கழிக்கப்படும்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி நாவற்குழிக் கோவில்பற்று நாவற்குழி இறை 'அலாத்திவெளி' ஏக்கர் இரண்டு றூட் இரண்டு பெட்ஸ் பதினொன்று தசம் ஐந்து (ஏ.2றூ 2-பெ 11.5) இது 1979ம் ஆண்டு சித்திரை மாதம் 27ந் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எ.சந்தியாபிள்ளையினால் 263ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் 1ம் துண்டெனச் சுட்டப்பட்டு உள்ளது. இதற்கு எல்லை **கிழக்கும், வடக்கும்** ஆசைப்பிள்ளை இரத்தினராசாவின் ஆதனம் **மேற்கு** வெற்றிவேலு திருஞானசம்பந்தனின் ஆதனம் **தெற்கு** கண்டிவீதி, இதடங்கலும் பதிவு F534/183.

வாங்கற்காரன் கொள்விலையின் நாலிலொரு பங்கை உடன் அவ்விடத்திலேயே செலுத்துவதுடன், பின்வரும் செலவுகளையும் மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும்.

1. அரச இறை (பவுண்டேஜ்) ஒவ்வொரு ரூபா5/-வுக்கும் 10 சதவீதமாகவும்
2. பிஸ்கால் செலவு சிவில் நடைமுறைக்கோவையின்படி
3. விளம்பரச் செலவுகளும், பிரசித்த செலவுகளும்
4. விற்பனவு சம்பந்தமான போக்குவரத்துச் செலவுகள்
5. விற்பனவுக் கமிஷன் அங்கீகரிக்கப்பட்டகட்டுப்பாடுகளுக்கு அமைவாகவும்
6. விற்பனவு ஒப்பந்தக் கட்டணம் (நொத்தாரிஷ் தயாரித்த பட்டியலின்படி)

**2003ஆம் ஆண்டு மார்கழி மாதம் 19ம் திகதி**

நீதிமன்றக் கட்டளைப்படி
து. சிறீமோகன்,
பதிவாளர்/பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.
(8046)



## பிரதான போதனைகள்




★ பெண் பிள்ளைகளுக்கு சுயநம்பிக்கை தேவை. அப்பொழுது மற்றவர்கள் கேலி செய்யப்பட்டார்கள்.
★ பெண்பிள்ளைகள் சுய நம்பிக்கையுடன் இருப்பதோடு, கூட்டாகச் சேர்ந்தால் எந்தப் பிரச்சினையையும் தீர்த்து விடலாம்.
★ ஆண்பிள்ளைகள் தங்களைக் கேலி பண்ணுகிறார்கள் என்பதற்காக பெண்பிள்ளைகள் பாடசாலைக்குப் போகாமல் இருத்தலாகாது. அவர்கள் ஒன்று பட்டு பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் வேண்டும்.

பிள்ளைகளுக்கு தங்களைப் பற்றிய நல்ல அபிப்பிராயம் ஏற்படுதல் வேண்டும். பிற்காலத்தில் அவர்கள் சுயநம்பிக்கையுடனும் சுய கௌரவத்துடனும் வாழ்வதற்கு அது அத்திபாரமாக அமையும். கேள்வி கேட்கும் பழக்கமுள்ள பிள்ளைகளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் திறன் உடைய பிள்ளைகளும் பிற்காலத்தில் சுய நம்பிக்கையுள்ளவர்களாகவும், கஷ்டமான பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் திறமையுள்ளவர்களாகவும் திகழ்வார்கள். சுய நம்பிக்கையை வளர்ப்பதற்கு தேவையான ஊக்குவிப்பையும் ஆதரவையும் பல பிள்ளைகள் பெறுவதில்லை. தங்களைக் குறைவாக மதித்திடும் சூழலில் அதிகமான பெண்பிள்ளைகள் வளர்கின்றார்கள். அதனால் தாங்கள் பலவீனமானவர்கள் எனவும் ஆண்பிள்ளைகளைப்போல் திறமையுள்ளவர்கள் அல்ல எனவும் பெண்பிள்ளைகள் எண்ணுகின்றார்கள். இதன் விளைவாக பெண்பிள்ளைகளை குறைத்தவர்கள் என எண்ணும் மனப்பாங்கை ஆண்பிள்ளைகள் வளர்க்கின்றார்கள்.

கேலிக்குப் பயப்படுவதனால் பெண்பிள்ளைகளின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்படுவதோடு அவர்களின் கல்வியும் பாதிக்கப்படுகிறது.

பாடசாலைக்கு போகும் வழியில் ஆண்களின் தொல்லைகளுக்கு ஆளாக நேரிடும் என்ற காரணமும் பெண்பிள்ளைகள் தமது கல்வியை இடையில் நிறுத்துவதற்கு ஒரு காரணம். பாடசாலை தூரத்தில் இருந்தால் இது நடப்பது அதிகமாகவுள்ளது.

கேலியையும் சண்டித்தனத்தையும் சமாளிப்பதற்கு பெண்பிள்ளைகள் சுய நம்பிக்கையையும் மனோபலத்தையும் வளர்க்க வேண்டும். கூட்டாகச் செயற்படுவதே பெண்பிள்ளைகளுக்கு சிறந்த தற்பாதுகாப்பு



உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:-
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண்-30,
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்

unicef

(C/6946)


# ஆந்திராவில் பொடா சட்டம் பயன்படுத்தப்பட மாட்டாது

## முதலமைச்சர் சந்திரபாபு கூறுகிறார்

(சென்னை)

ஆந்திராவிலுள்ள எந்தவொரு அரசியல் கட்சித் தலைவர்கள் மீதும் பொடா சட்டம் பயன்படுத்தப்பட மாட்டாது என்று அம் மாநில முதலமைச்சர் என். சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர் எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலின் பின்னர் தமது கட்சி தீவிரவாதம், சந்தர்ப்பவாதம், பிரிவினைவாதம் ஆகியவற்றை எதிர்த்துப் போரிடும் என்றும் இதற்காகத் தமது மாநிலத்திலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு செயற்படவுள்ளதால் பொடா சட்டம் என்பதை தமது மாநிலத்தில் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட மாட்டாது என்றும் கூறியுள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் திருப்பதிக்கு வழிபாடு செய்யவதற்காக காரில் சென்ற சமயம் தீவிரவாதிகள் குறிவைத்து நடத்திய தாக்குதலில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு மயிரிழையில் உயிர்தப்பினார்.

இதனையடுத்தே சந்திரபாபு நாயுடு தீவிரவாதத்தை முற்றாக அழிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட முன்வந்துள்ளார் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (து-2)



பருவமழை இந்த ஆண்டும் பொய்த்ததால், ஆறுகள், குளங்கள் வறண்டு தமிழகத்தில் தண்ணீர் பற்றாக்குறை தலைவிரித்தாடுகிறது. தண்ணீரின்றி விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கோடை காலத்தில் இதுவரை இல்லாத அளவு தண்ணீர் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளது தமிழகம். சென்னை ராட்டன் பஜாரில் மாநகராட்சி தண்ணீர் லொரியை எதிர்நோக்கி காத்திருக்கும் காலிக் குடங்கள்.

# பிலிப்பைன்ஸில் மண்சரிவு

## 70 பேர் உயிருடன் புதையுண்டனர்

(மணிலா)

பிலிப்பைன்ஸின் தலைநகர் மணிலாவில் ஏற்பட்ட மண் சரிவு காரணமாக 70 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 6 நாட்களாக பெய்து வரும் மழை கடும்புயல் காரணமாகவே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாகப் பிலிப்பைன்ஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த அனர்த்தத்தினால் 9 வீடுகள் முற்றாக அழிந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கப்படுகின்றன.

இதேவேளை, மண் சரிவில் புதையுண்டிருப்பவர்களை மீட்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ள தாக வும் இதுவரை உயிருடன் எவரும் மீட்கப்படவில்லை யெனவும் அவசர பணிகள் பிரிவு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (தி-2)



பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் தற்போது உலக நாடுகள் அனைத்தையும் பீதியடைய வைத்துள்ளது. இதனால் புகழ்பெற்ற இடங்கள், நினைவுச் சின்னங்கள், பாரம்பரிய ஸ்தலங்களுக்கு தற்போது பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இத்தாலியில் உள்ள உலக அதிசயங்களில் ஒன்றான பைசா நகரத்து சாய்ந்த கோபுரத்திற்கு அருகே உள்ள குப்பைத் தொட்டியை சோதனையிடும் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த காவலர்.

செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து
– குறள்

வலம்புரி

## பொறுப்பற்ற சாரதிகள்

யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவது வெளிப்படை. வாகனங்களின் பெருக்கம், வீதிகளின் ஒடுக்கம் என்பன வீதிவிபத்துக்கு காரணமாக உள்ளன என்பதற்கு அப்பால், வாகனச் சாரதிகளின் பொறுப்பற்ற தன்மையே விபத்துக்கான காரணத்தில் பெரும் பங்கை வகிக்கின்றது.

இதற்கு நேற்று முன்தினம் நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலுக்கு அண்மையில் நடந்த விபத்து நல்லதோர் உதாரணமாகும்.

பணம் உழைக்கும் பேராசையில் இரண்டு மினிபஸ் சாரதிகள் தத்தம் வாகனங்களை போட்டி போட்டுக் கொண்டு ஓடியதால் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மினிபஸ் ஒன்று வீதி ஓரத்தால் சென்றவர்களை மோதியது. இதனால் மூவர் படுகாயமடைந்தனர். இந்நிகழ்வு பிரஸ்தாப சாரதிகளின் பொறுப்பற்ற தன்மையையே காட்டுகின்றது.

மனித உயிர்களை மதிக்காத தன்மை, தம்மை யாரும் எதுவும் செய்துவிட முடியாது என்ற மனநிலை இவை காரணமாக எவர் எக்கேடு கெட்டாலும் நாங்கள் எதுவும் செய்வோம் என்ற பாங்கில் தங்கள் வாகனங்களை வேகமாக ஓட்டுகின்ற சாரதிகளால் வீதிகளில் நடமாடுகின்றவர்களின் உயிருக்கு எந்தவித உத்தரவாதமும் கிடையாமல் போகின்றது.

இவ்வாறு வாகனங்களை போட்டாபோட்டி போட்டுக் கொண்டு ஓடுவதும் அதனால் விபத்துக்கள் ஏற்படுவதும் யாழ்ப்பாணத்தில் சர்வசாதாரண நிகழ்வாகிவிட்டதெனில், அதற்கு அடிப்படைக் காரணம் போக்குவரத்துப் பொலிஸாரின் அசமந்தப்போக்கென்றே கூறவேண்டும்.

போக்குவரத்து கண்காணிப்பில் பொலிஸார் அக்கறையோடு ஈடுபட்டு, வேகக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்துவார்களாயின், பாதசாரிகளின் உயிர்களைப் பாதுகாக்க முடியும்.

சட்டங்களை அமுல்படுத்துவதில் உரியவர்கள் தவறுவிடுவார்களேயானால் மக்கள் சட்டங்களை தங்கள் கைகளில் எடுத்துக்கொள்வர். அதுவே நல்லூர் சட்டநாதர் சிவன் கோயிலடியில் இடம்பெற்ற விபத்தின்போது ஏற்பட்ட களேபரத்துக்கும், பொலிஸார் மீதான கல்வீச்சுக்கும் காரணமாகும்.

பொதுமக்கள் சட்டங்களை கையில் எடுப்பார்களாயின் வேகக் கட்டுப்பாட்டை மீறி ஓடுகின்ற மினிபஸ் சாரதிகளுக்கு அவர்கள் நல்ல பாடம் புகட்டுவார்கள்.

எனவே விபத்துச் சம்பவங்கள் இடம்பெறுகின்ற போது பொதுமக்கள் கிளர்ந்தெழுவதை கட்டுப்படுத்தவேண்டுமாயின் பொலிஸார் தங்கள் கடமையை ஒழுங்காகச் செய்ய முற்படவேண்டும்.

இது ஒருபுறமிருக்க யாழ். மாவட்ட தனியார் மினிபஸ் சங்கங்கள் வெறுமனே கட்டண உயர்வை மட்டும் செய்யாமல் வாகனம் ஓட்டுகின்ற சாரதிகளுக்கு மனித உயிர்களின் மகத்துவத்தை கொஞ்சமேனும் எடுத்துரைக்க வேண்டும்.

# நன்றே தோழி என் கொழுநன் வாழ்வே!

அவள் பெருநிலக் கிழாரின் மகள். பஞ்சணையிலே உறங்கி, பட்டாடை அணிந்து பன்னீரிலே நீராடி, பரிமளகந்தம் பூசி, பஞ்சரத்தினுள் இருக்கும் கிளிகளுடன் மழலை மென்மொழி பேசிக் காலங் களிப்பவர்.

தோழியர்களுடன் அம்மானை ஆடுவதும், பூப்பந்து விளையாடுவதும், நீராழி மண்டபத்திலே நிலாச் சோறு உண்பதும் அவளது பொழுது போக்கு. பாடினால் பிரபஞ்சமே மயங்கக் கூடிய அளவுக்குக் குரல் இனிமை கொண்டவள். காந்தள் மென் விரல்களால் நல்யாழின் நரம்புதனைத் தடவி நிறைய இசைச் செல்வத்தை வாரிவழங்குவதில் ஒப்பார் இலாதவள். நிலவைப் பழிக்கும் முகமும் மழை முகிலைப் பழிக்கும் குழலும், ஓதிமம் ஒதுங்கிச் செலலத் தக்க நடையும் உடைய பேரழகி. பஞ்சனையில் துயின்று, பாலன்னம் அருந்தி, பளிங்கு மாளிகையில் உலவித்திரிந்த அவளை திருமணம் செய்ய விரும்பிய செல்வச் சீமான்கள் ஏராளம். ஆனால் அவளது மனமோ நல்இதயம் நலிர்ந் தோர்க்கு உதவும் பண்பும் கட்டிளமையும் கொண்ட ஓர் இளைஞனையே நாடியது. பெரும் செல்வம் ஒன்றைத்தவிர மற்றைய செல்வங்கள் அனைத்தும் நிரம்பிய அந்த ஆணழகனைக் கைப்பிடிக்கவே அவள் மனம் விரும்பியது.

அவளது மனவிருப்பு தோழி மூலம் பெற்றோர் காதுக் கெட்டியது. மங்கையின் மனம் விரும்பியவனுக்கும் தங்களுக்கும் இடையே உள்ள அந்தஸ்து வித்தியாசம் பெற்றோரை யோசிக்க வைத்தது. அணிந்த பட்டுடை நலுங்காமல் இல்லை என்ற 'சொலலின் பெருளையே அறியாமல் விளையாட்டும் வேடிக்கையுமாகப் பொழுதைக் கழித்த அவள், தம் நிலைக்கேற்ற ஆடவனொருத்தனைத் தெரிவு செய்யாமல் 'விட்டாளே' என்று மனம் வருந்தினர். ஏழடுக்கு மாளிகையிலே எதுவித கவலையுமற்றவளாகத் துள்ளித் திரிந்த மகள் மலையடிவாரத்திலே மண்குடிசையிலே வாழும் ஒருவனைத் தேர்ந் தெடுத்து விட்டாளே என வாடினர். அடுத்த நாள் உணவுக்கு வழி தெரியாத ஒருவனுடன் எப்படி வாழப் போகிறாள் எனப் பதைபதைத்தனர். தாங்கள் நேரடியாக அழைத்துப் பேசினால் அன்பு மகளின் மனம் தாங்காதே என அஞ்சிய அவர்கள் அவளது தோழியினூடாக மகளுடன் பேச விரும்பினர்.

தோழி தெரிவித்த அத்தனையையும் ஆறதலாகச் செவிமடுத்தாள். தோழி! நீ சொல்வது அத்தனையும் உண்மையே! இவை அனைத்தையும் நான் முன்னரே அறிவேன. நான் தனத்தால் உயர்ந்தவளாக இருக்கலாம். ஆனால் அவரோ குணத்தால் உயர்ந்தவர். செல்வத்தைத் தேடிப்பெறலாம். ஆனால் குணம், கருவிலேயே திருவுடையதாக அமையவேண்டும். செல்வ வாழ்வு வாழும் என்னால் சிக்கன வாழ்வு வாழமுடியாதா? அம்ச தூளிகா மஞ்சத்தில் பஞ்சனையில் துயின்ற என்னால் மண் தரையில் புற்பாயில் படுத்துறங்க முடியாது என எண்ணி விட்டாயா? அன்பு ஒன்றுக்காக எதையும் துறக்கலாம்.

மங்கை கூறிய வார்த்தைகளைச் கேட்ட செவிலி மலைத்துப் போனாள். சின்னஞ்சிறு சிறுமியாகக் காட்சியளிக்கும் அவள் பென்னம் பெரிய தத்துவமல்லவா பேசுகிறாள் என எண்ணினாள்.

தோழி மூலம் மகளின் மன நிலை அறிந்த் நிலக்கிழார் செய்வது தெரியாது தடுமாறினார். அவர் விரும்பினால் மகளின் விருப்பத்துக்கு எதிராக செல்வச் சீமான் ஒருவனைத் தெரிந்தெடுத்து மகளுக்கு திருமணம் செய்து வைக்க முடியும். ஆனால் ஆசை மகளின் மனவிருப்புக்கு மாறாக நடக்க அவர் மனம் ஒப்பவில்லை. மனைவியுடன் இதுபற்றிக் கலந்தாலோசித்தார். அப்பொழுது அவர் மனைவி கூறினாள்.

'எங்களது ஒரே மகள் இவள். எங்களது சொத்து, சுகம், நிலம் புலம் அத்தனைக்கும் உரிமையானவள் அவள். திருமணம் முடித்த பின் இந்த வீட்டிலேயே வாழலாம்.'

மனைவியின் ஆலோசனையை நிலக்கிழார் ஏற்றுக்கொண்டார். சம்பிரதாய பூர்வமான பேச்சுவார்த்தைகளின் பின் மங்கையின் மனம் விரும்பிய இளைஞனுக்கும் மகளுக்கும் திருமணம் நடந்தேறியது திருமணம் முடிந்த ஓர் இரு தினங்க்ளில் கணவன் தனது ஊர் புறப்பட ஆயத்தமானான். கோலாகல வாழ்வு வாழும் மனைவியை குக்கிராமத்திற்கு வருமாறு எவ்வாறு அழைப்பது என அவன் தடுமாறிக் கொண்டிருந்த நேரத்தில் அவளே யாருடைய தூண்டுதலும் இல்லாமல், அவனுடன் செல்ல ஆயத்தமானாள். தோழி எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். அந்த வீடும் செல்வமும் அவளுக்குச் சொந்தமானது. கணவனுடன் இந்த மாளிகையிலே தங்க யாருடைய அனுமதியும் தேவையில்லை என்று எத்தனையோ முறை எடுத்துக் கூறினாள். அவர் இருக்கும் இடம்தான் எனக்குச் சொர்க்கம். மனைவியின் வீட்டில் ஒன்டிவாழ அவர் மனம் ஒருப்படார். அவர் மானஸ்தர். நாங்கள் சென்றுவர விடைதரவேண்டும் என்று பெற்றோர் தாள் பணிந்தனர்.

கண்ணீரும் கம்பலையுமாக பெற்றோர் விடைகொடுத்தனர்.

நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாயின. மகளைக்காணாமல் அவர் சுகதுக்கம் தெரியாமல் பெற்றோர் துன்பப்பட்டனர். ஈற்றில் தோழியை அழைத்து மகளிடம் சென்று நிலை அறிந்து வருமாறு கோரினர்.

தோழியைக கண்ட அச் செல்வி அகமும் புறமும் மலர அன்புடன் வரவேற்றாள். சிறிய மண்குடிசையானாலும் சுத்தமாகவும் பளபளப்பாகவும் விளங்கியது. புள்ளி மானைப் போல் துள்ளி ஓடியபடி குடும்பக் காரியங்கள் அத்தனையையும் கவனித்தாள். புள்ளி மான்களுடன் கிள்ளை மொழி பேசும் கிளிகளுடனும் விளையாடிக் கொண்டு திரிந்தவளா இன்று இத்தனை பொறுப்புடன் வீட்டு அலுவல்களைக் கவனிக்கிறாள் என அதிசயப்பட்டாள் தோழி.

மகிழ்ச்சியாக வாழ்கிறாயா எனக் கேட்டாள் தோழி. மகிழ்ச்சி என்றால் என்ன அர்த்தம்? மனதுக்கிசைந்த மணாளனுடன் மனம் ஒத்து வாழ்வதே ஒரு மகிழ்ச்சி தானே! நாங்கள் வசிப்பது மாளிகை அல்ல மண்குடிசை. முத்தும், பவளமும் இங்கு கொட்டிக் கிடக்கவில்லை. அன்பு வெள்ளம் நிரம்பி இருக்கிறது. அறுசுவை உணவை அருக்கி அருக்கி உண்ட எனக்கு இன்ற முற்றாத வரகரிசிச் சோறு தேனாக இனிக்கிறது. உப்பில்லாமல் வெந்த குப்பைக் கீரைகறி அமிர்தம் போல இருக்கிறது. நாங்கள் வசிப்பது மலையும் மலை சார்ந்த பகுதியுமாக இருப்பதால் உப்புக்கு இங்கு தட்டுப்பாடு அதிகம். ஆதலால் கறிகளுக்கு உப்புச் சேர்ப்பதையே விட்டு விட்டோம். தோழி! எனது பிறந்த வீடு செல்வச் செழிப்பு மிக்கதுதான். எது பெற்றோர் என்னை பூபோல பேணி வளர்த்தவர்கள் தான். ஆனால் அங்கு நான் காணாத ஒருமன அமைதியை இங்குநான் காண்கிறேன்.

மன்னனே உழவனாக, வயிலில் இறங்கி பனை நுகத்தில் மாடுகளுக்குப் பதிலாக யானைகளைக் கூட்டி உழுது, வெள்ளியை விளைத்தால் பொன் விளையும் நாடு எனது பிறந்த நாடு. ஆனால் அந்த ஈண்டிய செல்வம் எனக்குத் தேவையில்லை.

**"இராமழை பெய்த இரா ஈரத்து**
**செங்கோல் வேந்தன் உழவனாகி**
**பனை நுகம் கொள்டு யானை**
**ஏர்பூட்டி**
**வெள்ளி விதைக்க பொன்னே**
**விளையினும்**
**வேண்டேன் பிறந்த கத்து ஈண்டிய**
**வாழ்வே"**

இப்பொழுது நாம் வாழ்வது எளிய வாழ்வு. இருப்பிலே இருந்த வரகு தானியம் முழுவதையும் விதைத்து விட்டோம். ஆதலால் அடுத்த நேர உணவுக்குத் தானியம் கையிருப்பில் இல்லை. அக்கம், பக்கம், அயலவர் எனப் பலரிடமும் வரகரிசி கடனாகப்பெற்று விட்டோம். அதனால் எமது வயலிலே உள்ள முற்றாத வரகின் கதிர்களைக் கொய்து மலையடி வாரத்திலே காயப்போட்டு, கதிர்களைக் கிளியும், குருவிகளும் கொத்திக்கொண்டு போகாமல் பாது காத்து, காய்ந்த பின் அதனை உரலிலே போட்டு குற்றி பதர்களை எல்லாம் நீக்கி, புடைத்தெடுத்த அரிசியைக் கடனாக வாங்கியாவர்களுக்கெல்லாம் பகிர்ந்தளித்த பின் எஞ்சும் அரிசியைத்தான் உலையில் ஈடுவேன். பானையில் வேகும் வரகரிசிச் சோற்றுடன் சேர்த்துச் சாப்பிட குப்பைக் கீரைதான் இங்கு கிடைக்கக்கூடிய கறி. அதனை சமைக்க உப்பு இல்லாததால், உப்பின்றியே கறியாக்க வேண்டும். இப்படி ஆக்கிய உணவை உண்பதற்கான தாலத்தைக்கூட இரவலாகத்தான் வேண்ட வேண்டும். அப்படி வாங்கும் தாலத்திலும் ஏராளமான வெடிப்புகள். வரகரிசிச் சோற்றினால் அந்த வெடிப்புகளை அடைதது விட்டுத்தான் உன்போம். அப்படியும் ஒவ்வொரு நாளும் உண்ண வசதி இல்லாததால் ஒன்று விட்டு ஒருதினம் தான் உண்போம். அப்படி உண்டாலும் கணவனுடன்

**பொ. இராசதுரை**

சேர்ந்து வாழும் வாழ்க்கைதான் எனக்கு இன்பத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறது.

**"செங்கோல் வரகு பசும் தளிர்**
**கொய்து**
**கன்று காத்து குன்றில் உணக்கி**
**ஊடுபதர் போக்கி முன் உதவி**
**னோர்க் குதவி**
**குப்பைக்கீரை உப்பின்றி வெந்து**
**இரவல் தாலம் விரைவுடன் எடுத்து**
**சோறு கொண்டு பீறல் அடைத்து**
**ஒன்று விட்டு ஒரு பொழுது உண்டே**
**கிடப்பினும்**
**நன்றே தோழி என் கொழு நன்**
**வாழ்வே!"**

இதற்கு மேல் அந்தத் தோழியால் என்ன செய்யமுடியும்.

**"தற்காத்து, தற்கொண்டான்காத்து**
**தகைசார்ந்த**
**சொற்காத்து சோர்விலான் பெண"**

என்ற வள்ளுவர் வாக்குத்தான் தோழிக்கு ஞாபகம் வந்தது. □

## தினசரி தியானம்

### வைராக்கியம்

வைராக்கியம் என்பது காமம் அற்ற அல்லது பற்றற்ற தன்மையாகும் வைராக்கியம் மனிதனை பந்தத்திலிருந்து விடுவிக்கிறது. வைராக்கியம் தான் முதன்மையான நற் பண்பாகும். இந்திரிய வாழ்க்கையின் குறை பாடுகளைக் கவனித்துப்பார். முனிவர்களின் கூட்டத்தில் வசி. நீ வைராக் கியத்தை விருத்தி செய்வாய். விவேகத்திலிருந்து பிறந்த வைராக்கியமானது உனக்கு உதவுவதோடு நிரந்தரமானதாகவும் இருக்கும். வைராக் கியம் இல்லாது ஒரு இம்மியளவு கூட ஆன்மீக முன் னேற்றம் சாத்தியப்படாது.

சுவாமி சிவானந்தர்

## கொழும்புத்துறைக்கான நீர் விநியோகத்திட்டம் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யு.என்.எச்.சி.ஆரின் நிதியுதவியுடன், யாழ். மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட்டு வந்த கொழும்புத் துறைப் பகுதிக்கான நீர் விநியோகத் திட்ட வேளைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

15இலட்சம் ரூபா நிதி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந் நீர் விநியோகத்தின் மூலம் கொழும்புத் துறை உப்புக்குளம் பிள்ளையார் கோயில் சுற்றாடலில் வசிக்கும் சுமார் 300குடும்பங்கள் பயனடைய முடியும்.

இப் பகுதிக்கான நீர் விநியோகத்திற்காக தண்ணீர்த்தாங்கி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், 25 நிலையான தண்ணீர்க்குழாய்களும் இணைக்கப்பட்டுள்ளன.

இவ் வேலைத் திட்டத்தின் ஒரு பகுதி நாயன்மார்கட்டு தெற்குப் பகுதிக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அப் பகுதியில் உள்ள சுமார் 150 குடும்பங்கள் பயனடைய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான உபகரண உதவிகளை ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-3,7)

## சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

ஜ.ரி.சற் நிறுவன அனுசரணையுடன், யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள அலகு நடத்திய உளவளத் துணையாளர் பயிற்சி நெறியில் பங்கேற்றவர்களுக்கான சானறிதழ் வழங்கும் வைபவம இன்று ஞாயிற்றுககிழமை பி.ப.2.30மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ் பல்கலைககழக துணைவேந்தர் பேராசிரியர் எஸமோகனதாஸ் கலந்துகொள்வுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக 'சாந்திகம்' அமைப்பின் தலைவர் என்.கனகரடணம், வன்னி கல்விக் கழகத்தைச் சேர்நத அருள் மாஸ்டர், யாழ். பல்கலைக கழக புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், கலைப் பீடாதிபதி பேராசிரியர் பி.கோபாலகிருஷ்ணஐயர், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ்.மகாலிங்கம் ஆகியோர்பங் கேற்கவுள்ளனர் (உ)

## டெங்கு நுளம்பு ஒழிப்பு திட்டம் குடாநாட்டில் அமுல்

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக, டெங்கு நுளம்புகளை புகையூட்டல் மூலம் அழிக்கும் திட்டமொன்று யாழ். மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். ம.மரியதாஸ் தலைமையில் முன்னெடுக்கப் படவுள்ளது.

நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக 3 நாட்கள் இவ் நுளம்பு அழிப்புச் செயற்பாடுகள் கொழும்புத்துறை, இலந்தைக்குளம் வீதி, தெ[illegible]மாடி, நீராவியடிப் பிள்ளையார் கோயிலடி மற்றும் பீச் றோட் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ். மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாஸ் தெரிவித்தார்.

(உ-3,7)

# பாம்புகளுடன் விளையாடியவர் அதன் கடிக்கு இலக்கானார்

(யாழ்ப்பாணம்)

பாம்புகளுடன் விளையாடியவர் அதனால் கடியுண்டார். இச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் இணுவில் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் இணுவில் மேற்கைச் சேர்ந்த பஞ்சாட்சரம் சுவேந்திரன் (வயது25) என்பவரே பாம்புக் கடிக்கு இலக்கானவர் ஆவார்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, பாம்பு பிடித்து அவற்றுடன் விளையாடும் பழக்கமுடைய பிரஸ்தாப நபர் நேற்றைய தினம் பற்றைக்குள் இருந்த இரண்டு பாம்புகளைப் பிடித்துக் கட்டி வைத்து அவற்றுடன் விளையாடிக் கொண்டிருந்தார். அதன் போது அந்தப் பாம்புகளில் ஒன்று கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டு வந்து திடீரென பிரஸ்தாப நபரின் காலைத் தீண்டியது.

இதனையடுத்து உடனடியாக அவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இதேவேளை நேற்று முன்தினம் கிணறு ஒன்றினுள் இருந்த நான்கு பாம்புகளைப் பிடித்து அவற்றுடன் பிரஸ்தாப நபர் விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (கு-7)

# உரிய நடவடிக்கை இல்லையேல் மீண்டும் வேலை நிறுத்தம் செய்வோம்

## சுகாதார தொழிற் சங்கங்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

கடந்த வாரம் அடையாள வேலை நிறுத்தம் ஒன்றில் ஈடுபட்ட 54 சுகாதார சேவை தொழிற் சங்கங்கள் நேற்று முன்தினம், தமது சம்பள முரண்பாடு களைத் தீர்த்து வைக்குமாறு பிரதமருக்கும் ஏனைய உயரதிகாரரிகளுககும் எழுத்து மூலமாக வேண்டுகோள்விடுத்துள்ளன. ஒரே தடவையில் ஒரே தீர்வை முன்வைக்குமாறும் அல்லது தொடர்ந்து வேலை நிறுத்தங்களைச் செய்யப்போவதாகவும் அதில் தெரிவித்துள்ளன.

தமது கோரிக்கைகள் தொடர்பாக பிரதமர், சுகாதார அமைச்சர் தயாரத்ன, திறைசேரித் தலைவர் சரித்த ரத்வத்தை ஆகியோர் கவனிக்க வேண்டுமென்றும் இவர்களுடன் தனித்தனியாக பேச்சுவார்த்தைகள் நடாத்துவதற்கு அவர்கள் சந்தர்ப்பம் தர வேண்டுமென்றும், அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவர்களின் சம்பள முரண்பாடுகளுக்குத் தீர்வு கண்டது போல தமது சம்பள முரண்பாடுகளுக்கும் அரசாங்கம் ஒரே தீர்வைத் தரவேண்டும். 1997 ஜனவரி தொடக்கம் 2003 ஜுலை வரையான 6 வருட காலத்திற்கான நிலுவைகளின் 50 வீதத்தை வழங்க வேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சரால் முன்வைககப்பட்ட திருத்தங்களை அமைச்சரவை முழுமனதாக ஏற்றிருந்தது. ஆனாலும் கடந்த திங்களன்று சுகாதாரத் தொழிற்சங்கங்கள் பாராளு மன்றத்தின் முன் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். மூன்று கட்டங்களாக சம்பள நிலுவைகள் வழங்கப்படுவதை இவை ஆட்சேபித்திருந்தன. 1997ல் இருந்து மேலதிக கொடுப்பனவுகள் இன்னமும் வழங்கப்படவில்லை. இதேவேளை இனிமேல் இவ்விவகாரத்தை தன்னால் கையாள முடியாது இது நிதிவிவகாரத்துடன் சம்பந்தப்பட்டது என கடந்த வாரம் பாராளுமன்றில் சுகாதார அமைச்சர் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ந-6)

# குற்றச் செயல்களைத் தடுக்கும் பொலிஸாருக்கு பாதுகாப்பு

## புதிய பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுக்க துணிச்சலுடன் செயற்படுவதற்கு பொலிஸ் அதிகாரிகளுக்குப் பாது காப்பு வழங்கப்படுவது அவசியமாகும். இவ்வாறு புதிய பொலிஸ்மா அதிபராகப் பதவி ஏற்கவுள்ள இந்திரா டி சில்வா தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்தாவது,

நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களுக்கு துணிச்சலான முறையில் முகம் கொடுப்தற்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்க வேண்டும். இது குறித்து நான் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கவனத்திற்கு கொண்டுவரவுள்ளேன் என்றும் இந்திரா டி சில்வா தெரிவித் துள்ளார். (ம)

## சட்ட ஆலோனை விளக்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலவச சட்ட ஆலோசனை மற்றும் சட்ட உதவிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டமொன்று இன்று பிற்பகல் 3.00 மணிக்கு மல்லாகம் நீதிவான் முகாமில் நடைபெறவுள்ளது.

யு.என்.எச்.சி.ஆர் இன் அனுசரணையுடன் சட்ட உதவிகள் மன்றம் நடத்தும் இந்நிகழ்வின் மூலம் ஏழ்மைகாரணமாக சட்ட உதவிகளைப் பெறமுடியாதவர் கள் நன்மை அடைவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## வடமராட்சி கிழக்கின் அபிவிருத்திக் கூட்டம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கின் அபிவிருத்தி தொடர்பாக ஆராயும் கூட்டம் மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலத்தில் இன்று காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.பி.வேலாயுதம்பிள்ளை

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

# சகவாழ்வு அரசியலை ஏற்படுத்த அரசு விருப்போடு செயற்படுகிறது

## வர்த்தக சம்மேளனத்திடம் பிரதமர் எடுத்துரைப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வர்த்தக சம்மேளனத்தின் தலைவர்களை கடந்த வியாழக்கிழமை சந்தித்து அரசியல் சூழ்நிலை பற்றி உரையாடினார். சந்திப்பின் போது இன்றைய அரசியல் நெருக்கடி முதலீட்டாளர்கள் கொண்டிருந்த நம்பிக்கையை பாதித்துள்ளதென்றும். இது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தும் தன்மை கொண்டதென்றும் சம்மேளனத் தலைவர்கள் எடுத்துக்கூறினர்.

ஜனாதிபதியும் அரசும் தமக்கிடையேயான வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்ளல் வேண்டும். சகவாழ்வு பற்றியும் இரு கட்சி அணுகு முறை பற்றியும் பரிசிலித்தல் வேண்டும். டோக்கியோவில் வழங்குவதாக உடன்பட்டுள்ள 4500 மில்லியன் டொலர்களை பயன்படுத்தி ஸ்ரீலங்காவை உயிர்ப்பித்தல் வேண்டுமென்றும் வர்த்தக சம்மேளனத் தலைவர்கள் எடுத்துரைத்தனர்.

திடீர் தேர்தல் ஒன்றினால் ஏற்படக்கூடிய ஆபத்துப் பற்றி எச்சரிக்கை செய்த அவர்கள் மாகாண சபைகள் அனைத்திற்குமான தேர்தல்கள் ஒரே நாளிலேயே நடத்தப்பட வேண்டுமென்றும், இது தொடர்பாக அடுத்த வாரம் தாம் ஜனாதிபதியைச் சந்திக்கும் போது, அவரிடம் எடுத்துக் கூற விருப்பதாகவும் தெரிவித்தனர்.

சகவாழ்வு அரசியலை முன்னெடுப்பதில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு விருப்பத்துடன் செயற்படுகின்றது என்றும் ஜனாதிபதி பொறுப்பேற்ற அமைச்சுக்களின் நிதி ஒதுக்கீடுகளைத் தாம் ஏற்று நிறைவேற்றியமை இதற்கு உதாரமானதென்றும். பிரதமர் அவர்களிடம் எடுத்துரைத்தார்.

எவ்வாறாயினும் பாதுகாப்பு அமைச்சைத் தம்மிடம் திரும்பவும் ஒப்படைக்க வேண்டுமென்றும் புலிகளும் கூட அரசிடம் பாதுகாப்பு அமைச்சு ஒப்படைக்கப்பட்டாலே பேச்சுக்களுக்குத் திரும்பலாம் எனவும் தெரிவித்துள்ளதாக அவர் கூறியுள்ளார். (ந)

# பெரும்பான்மையினரின் தேவைக்கேற்ப

ணையுடன் சட்ட உதவிகள் மன்றம் நடத்தும் இந்நிகழ்வின் மூலம் ஏழ்மைகாரணமாக சட்ட உதவிகளைப் பெறமுடியாதவர் கள் நன்மை அடைவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சயன்ஸ் அக்கடமியின் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணிக்கு நிறுவன மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறை அதரிகாரி றோகான் ராஜசிங்கம் பிரதம விருந்தினராக கலந்துகொள்ள வுள்ளார்.

இந்நிகழ்வில் மாணவர்களுக் கான கணிப்பீட்டு அறிக்கை வழங்கலும் பதக்கம் சூட்டலும் இடம்பெறும். (ந)

---

## வாஜ்பாயின்...

செயலாளர் இல.கணேசன் கருத்துத் தெரிவிக்கையில் இத் தகையதோர் முடிவை எடுப் பதற்கு அவர்களுக்கு அதிகாரம் இருந்த போதும் அவர்கள் எடுத்த முடிவு துரதிஷ்ட வசமானது. பாரதிய ஜனதாக் கட்சி உண்மையான கூட்டணித் தர்மத்தைக் கடைப் பிடித்து வந்துள்ளது. என்றும் தெரிவித்தார். (வ)

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கின் அபி விருத்தி தொடர்பாக ஆராயும் கூட் டம் மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலத்தில் இன்று காலை 9.00 மணிக்கு இடம்பெற வுள்ளது.

மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.பி.வேலாயுதம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன், மின்சார சபை அதிகாரிகள், வீதி அபிவித்தி அதிகார சபை அதிகாரிகள், கல்வித் திணைக்கள அதிகாரி கள், மற்றும் விடுதலைப் புலி களின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.(த-43)

## வருடாந்த மாநாடு

(நவாலி)

சலன சித்திரம் அமைப்பின் வருடாந்த மாநாடு இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம், சலன சித்திர அமைப்பின் அங்கத்த வர்களுக்கான அடையாள அட்டை வழங்கல் புதிய நிர்வாகிகள் தெரிவு, இவ்வமைப்பு அண்மை யில் நடத்திய திரைப்படத் தொழில் நுட்பப் பயிற்சியில் பங்கு பற்றுவோருக்கான சான்றி தழ் வழங்கல் முதலியன இடம் பெறவுள்ளன. (உ-102)

டதென்றும் சம்மேளனத் தலைவர் கள் எடுத்துக்கூறினர்.

ஜனாதிபதியும் அரசும் தமக்கி டையேயான வேறுபாடுகளைத் தீர்த் துக் கொள்ளல் வேண்டும். சகவாழ்வு

நாளிலேயே நடத்தப்பட வேண்டு மென்றும், இது தொடர்பாக அடுத்த வாரம் தாம் ஜனாதிபதியைச் சந்திக் கும் போது, அவரிடம் எடுத்துக் கூற

ஒப்படைக்க வேண்டுமென்றும் புலி களும் கூட அரசிடம் பாதுகாப்பு அ[illegible]சு ஒப்படைக்கப்பட்டாலே பேச்சுக்களுக் குத் திரும்பலாம் எனவும் தெரிவித் துள்ளதாக அவர் கூறியுள்ளார். (ந)

# பெரும்பான்மையினரின் தேவைக்கேற்ப "தேசிய கொள்கைகள் அமுலாக வேண்டும்

## எதிர்க் கட்சித் தலைவர் கருத்து

(நமது நிருபர்)

பெரும்பான்மையின மக்களின் தேவைகளுக்கேற்ப தேசியக் கொள் கைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென எதிர்க் கட்சித் தலை வர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

ஹோமகம ஆதார வைத்திய சாலையில் அமைக்கப்பட்டுள்ள எக்ஸ் ரேப் பிரிவு, ஈ.சி.ஜிப்பிரிவு, இரத்த வங்கி உள்ளிட்ட கட்டடத் தொகுதி யைத் திறந்து வைத்துப் பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில் கூறியதாவது,

நிரந்தரக் கொள்கை ஒன்று இல்லாத காரணத்தினாலேயே நாட் டின் அபிவிருத்தி பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளது. அரசாங்கம் மாறும் போதும் அமைச்சர்கள் மாறும் போதும் கொள்கைகள் மாற்றமடை கின்றன.

அமைச்சர் ஒருவர் செயற்திட்ட மொன்றை முன்னெடுத்துச் செல்லும் போது புதிய அமைச்சர் ஒருவர் நிய மனம் பெற்றால் அவர் முன்னைய அமைச்சரின் கொள்கைகளை முன் னெடுத்துச் செல்வதில்லை.இது மிகப் பெரும் பாதகமான நிகழ்வாகும்.

எமது அனைத்து நடவடிக்கை களும் பொது மக்களின் [illegible]ன்மை கருதியே மேற்கொள்ள [illegible]ண்டு மென்று மகிந்தராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (ம)


மிக விரைவில் எதிர்பாருங்கள்
உங்கள் வலம்புரியில்
வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
எழுதிய
தேசிய வழமை



தென் பகுதிக்கு சுற்றுலாச் செல்ல
அரிய சந்தர்ப்பம்

யாழ்.மக்களே!

கண்டி, திருகோணமலை, கோணேஸ்வரம், கிண்ணியா, வெள்ளைக்கடற்கரை, நுவரெலியா, கதிர்காமம் ஆகிய இடங்களை சுற்றிப்பார்க்க உங்களை அழைத்துச் செல்கிறார்கள்.

K.P.ரவல்ஸ்

சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை

சுற்றுலாச் செய்ய விரும்புவோர் உங்கள் பெயர்களை எதிர்வரும் 28ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளவும்.

எதிர்வரும் 30ம் திகதி உங்கள் வீடுகளுக்கு வந்தே அழைத்துச் சென்று, பின்னர் வீட்டிலேயே கொண்டு வந்து இறக்கப்படும்.

குளிரூட்டப்பட்ட பஸ்ஸில் சுகமாகச் சுற்றுலாச்செய்ய தொடர்பு கொள்ளுங்கள்

K.P.ரவல்ஸ்

சங்கரத்தைச் சந்தி வட்டுக்கோட்டை

தொலைபேசி: 021-222 3038, 0777 111725



இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.12.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.